நம்நாடு

The 'Nam Nadu' A Tamil Daily. The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

பதிவு எண்: எம். 6311 — மலர் 14—இதழ் 192 ★ சென்னை: திருவள்ளுவராண்டு 1998 வைகாசி 17 (31—5—67) புதன் — வெளியீடு: திருவள்ளுவராண்டு 1998 வைகாசி 18 (1—6—67) வியாழன் ★ நிறுவியது: 1953 — தொலைபேசி: 51381

‘பலாத்காரம்’ நமக்கு உடன்பாடல்ல!

‘ஆதரித்ததும் இல்லை—ஆதரிக்கப் போவதுமில்லை’

‘இந்தியைத் திணிக்கும் துணிவு டெல்லிக்கு வந்துவிடாது’

‘மாணவர்கள் அனுபவித்த தொல்லைகளைத் தமிழக அரசு மறந்துவிடவில்லை’—மாணவரிடையே அறிஞர் அண்ணா உரை

கொடைக்கானல், மே 30—

“மக்களுக்காகவும், மக்கள் அரசுக்காகவும் சேவை செய்யத் தங்களது சக்தியையும், திறமையையும் எப்படித் திரட்டமுடியும் என்பது குறித்து மாணவர்கள் சிந்திக்கவேண்டும். மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு நான் ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறேன்; கூடிய விரைவில் நான் அதை வெளியிடுவேன்”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் இங்கு நடைபெற்ற மாணவர் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டின் கடைசி நாள் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களின் ஆழ்ந்த மொழி உணர்ச்சியை மாநில அரசு பாராட்டுகிறது.

நானும் மாணவனாக இருந்தவன் தான். அவர்களுடைய நிலையை-உணர்வை என்னால் உணர இயலும்; ஆனால், என் போன்று பொறுப்பில் உள்ளவர்களின் நிலையை மாணவர்கள் உணர இன்னும் பத்தாண்டுகள் ஆகும்.

மாணவர்களின் தீர்மானம், பழுக்கக் காய்ச்சிய இரும்புக்குச் சமமானது! இரும்பைப் பழுக்கக் காய்ச்சினால் மட்டும் போதாது! வேலைக்கும் உதவ வேண்டுமானால், அதைக் குளிர் தண்ணீரில் போட வேண்டும்! அவ்வாறு தண்ணீரில் போட்டு குளிரவைப்பதுதான் இப்போது என்னுடைய பணியாகும்.

'பலாத்காரம் என்பது நமக்கு உடன்பாடானது அல்ல! அதை நான் ஆதரித்ததும் இல்லை—ஆதரிக்கப்போவதும் இல்லை!

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மாணவர்களும் ஏனையோரும் அனுபவித்த தொல்லைகளைத் தற்போதைய அரசு அறியும். அதனால்தான், 1000-க்கு மேற்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கும், டலர்மீது இருந்த வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கும் அரசு ஆணையிட்டது.

அண்மைக்காலம் வரையில் கூட, வட நாட்டுத் தலைவர்கள் தமிழக மக்களின் மொழி உணர்ச்சியை முழுமையாக உணராமலிருந்தனர். இப்பொழுதுதான், நேருவின் உறுதிமொழியை அமுல்படுத்துவதற்கான ஒரு மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டுவருகின்றனர். மசோதா விவரங்களை விதிகளையும் காணாமல் படித்த பிறகே அதுபற்றிக் கருத்துக் கூறுவேன்.

தமிழகத்தில் ஆட்சி மாறியிருப்பதால், ‘இந்தியைத் திணித்து விடலாம்’ என்ற துணிவு டெல்லிக்கு வந்து [illegible] ஆட்சி மொழி ஆகும்’ என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்துவிட்டார்கள்! ‘இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மங்கிவிடவில்லை’ என்பதை இம்மாநாடு அவர்களுக்கு எடுத்துக்காட்டும்;’

திருத்தத் தவறினால்....

இரண்டு நாட்களாக நடைபெற்ற இம்மாநாட்டில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

“14 தேசிய மொழிகளையும் ஆட்சிமொழியாக ஏற்பதற்குத் தகுந்தபடி அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்; இதைத் தவிர எந்த முறையும் மாணவர்களைத் திருப்திப்படுத்தாது; ஆகையால் இந்திக்கு மட்டும் ஆட்சிமொழித் தகுதியை அளிக்கும் அரசியல் சட்டத்தை 1969 ஜனவரி 24-க்குமுன் திருத்த வேண்டும் என்று மத்திய அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. இதில் அரசு தவறிவிட்டால் தமிழக மாணவர்கள் ஓர் அறப்போராட்டத்தைத் துவங்குவர்!”

என்ற தீர்மானம் ஒன்றும் அவைகளில் ஒன்றாகும்.

மாணவர்களுக்கு அண்ணா பாராட்டு

அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“மாணவர் சமூகம் தி.மு.க. அரசுக்கு ஒத்துழைப்புத் தருவதாக உறுதி தந்ததற்கு நான்

மும்மொழித் திட்டம்—தமிழக அரசுக்குக் கோரிக்கை

“மும்மொழித் திட்டம் இந்தி ஆதிக்கத்துக்கே வழிவகுக்கும்; ஆகையால், ‘தமிழ் ஆங்கிலம் மட்டுமே’ என்ற இரு மொழித் திட்டமே போதும். மும்மொழித் திட்டயோசனையைக் கைவிட வேண்டும்!”

என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

‘இனியும் பிரச்சினையைத் தள்ளிப்போட முடியாது’

‘மொழிச் சிக்கலில் தீர்வு காண மத்திய அரசு முனைவது அவசியம்’

அமைச்சர் கே. ஏ. மதியழகன் எச்சரிக்கை

கொடைக்கானல், மே 30—

“இந்தப் பெரிய துணைக் கண்டத்தில் வாழும் பலதரப்பட்ட மக்கள் மீது, 15 கோடி பேர் மட்டுமே பேசும் இந்தியைத் திணிப்பது சனநாயகத்துக்கு விரோதமான செயலாகும்! இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து, இப்படிப்பட்ட இந்தி வெறியர்களிடமிருந்துதான் ஏற்படவிருக்கிறது — பிரிவினையை விரும்பாத வேறு யாரிடமிருந்துமல்ல!”

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இங்கு நடைபெற்ற மாணவர் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றுகையில் தெளிவுபடுத்தினார்கள். அவர் மேலும் கூறியதாவது:—

தி. மு. கழகம் சொல்லும் 14 தேசிய மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவது என்ற கொள்கையைத் தவிர, மொழிப் பிரச்சனைக்கு நிரந்தரமானதும், திருப்திகரமானதுமான வேறு பரிகாரம் இல்லை. ஆரம்பத்தில் தமிழ், வங்காளி போன்ற சில மொழிகளை ஆட்சி மொழியாக்கலாம்.

இதில் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படக் கூடும் என்பதையும் நான் உணருகிறேன். பல மொழிகளைப் பேசும் மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதற்கும் இந்திய ஒற்றுமையைக் காப்பதற்கும் இதைவிட ஒரு தியாகம் செய்ய முடியாது.

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்திய அரசு நாட்டம் செலுத்தவில்லை; பிரச்சினையைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறது.

இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டுமானால், மொழிப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வேண்டும்; பரிகாரம் காண்பது இந்திக்காரர்களிடம்தான் இருக்கிறது.

தேர்தலில் பெற்ற தோல்வியிலிருந்து டில்லி அரசு தக்க படிப்பினையைப் பெறவேண்டும்.”

‘கொடுமைச் செயல்கள் புரிந்தவர் தப்பித்துக்கொள்ள முயலுகிறார்’

‘கூறிவரும் குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்க முன்னாள் முதலமைச்சரால் இயலுமா?’

பக்தவத்சலம் கூற்று—அமைச்சர் செ. மாதவன் அறைகூவல்

கோடைக்கானலில் நடைபெற்ற மாணவர் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில் பேசுகையில், சட்ட அமைச்சர் செ. மாதவன், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது கடைபிடித்த கொடுமைச் செயல்களைக் கண்டித்தார்.

அவரது பேச்சின் ஒரு பகுதி, நேற்றைய இதழில் வெளியாகியிருக்கிறது; மற்றொரு பகுதி வருமாறு:—

தி. மு. கழகத்தினர்மீது ஏராளமான பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டிருக்கின்றன. இதை நான், ‘புதிய அரசின் சட்ட அமைச்சர்’ என்ற முறையில் கூறுகிறேன்.

அறப்போராட்டத்தின் போது உயிரிழந்தோர் எண்ணிக்கை சம்பந்தமான உண்மைகளைக் காங்கிரசு அரசு மறைத்துவிட்டிருக்கிறது!

முன்னாள் முதலமைச்சர் கூறிக்கொண்டு வரும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியுமா என்று நான் பக்தவத்சலத்தைக் கேட்கிறேன். கொலை செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எந்த ஒரு நபரையாவது தி. மு. க. அரசு விடுதலை செய்ததாக நிரூபிக்க முடியுமா என்று பக்தவத்சலத்துக்கு அறைகூவல் விடுக்கிறேன்.

ஆனால் பக்தவத்சலம், தான் செய்த கொடுமைச் செயல்களின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக சம்பந்தப்பட்ட ‘பைல்’களையெல்லாம் அழித்திருக்கிறார்!

பொறுத்துப் பொறுத்துப் பழகியவர்களே—பொறுங்கள்!

ஆத்திரக்காரர்களின் புலம்பல் பற்றி அக்கறை வேண்டாம்

புதுக்கோட்டை, மே 31—

‘போராட்டம் நடத்தி எங்களைக் கவிழ்த்துவிடப் போவதாகக் காங்கிரசார் கூறிவருகிறார்கள். அதுபற்றி எங்களுக்குக் கவலை இல்லை! இதெல்லாம் பயனற்ற பேச்சு!

“பொறுப்புள்ள காங்கிரசத் தலைவர்கள் இப்படியெல்லாம் பேசவில்லை; நான்காம் தரத்தில் உள்ளவர்கள்தான் பேசுகிறார்கள்! இதிலிருந்தே, அவர்களுக்கிருக்கும் ஆத்திரம் புலனாகிறது! இருபதாண்டுகாலம் ஆட்சியில் இருந்தவர்களல்லவா? ஆத்திரம் வரத்தானே செய்யும்?

“‘பதவி’ என்ற விளக்கு அணைந்துவிட்டதால் கலக்கமடைந்திருக்கிறார்கள்! வேதனையடைந்திருக்கிறார்கள்!

“பெருமையைப் பெற்றிருக்கிறோம் நாம்; எனவே, எதையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்! இருந்ததை இழந்தவர்களின் பேச்சுக்கு செவி மறக்கக் கூடாது! அவர்கள் மீது ஆத்திரமோ வருத்தமோ கொள்ளக்கூடாது!

“தூற்றினால் கேட்டுக் கொள்வோம்! தாக்கினால் பெற்றுக் கொள்வோம்—பொறுத்துக் கொள்வோம்!

“‘பொறுத்தவர் பூமியாளுவார்’ என்று சொல்லுவார்கள்; நாம பொறுத்திருந்தோம்—ஆட்சியைக் கைப்பற்றினோம்! இன்னும் பொறுத்திருப்போம்—பரந்த இடத்தைக் கைப்பற்றுவோம்!

“வெடி வெடிக்கிறது—அந்தச் சத்தத்தினால் காது அதிர்ச்சியடைகிறது; ஆனால், காது அழிந்துவிடுகிறதா, என்ன?

“பதவியை விட்டுவிட்டுப் பிதற்றித் திரிபவர்களின் பேச்சு, தி. மு. கழகத்தை அழித்துவிட முடியுமா, என்ன?”

—அறிஞர் அண்ணா

(புதுக்கோட்டை கூட்டத்தில்)

கோயில் நிர்வாக ஊழல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

தமிழக அரசு விரைவில் முடிவுசெய்யும்

அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, மே 30—

“தருமகர்த்தாக்களாக இருந்துகொண்டு கோவில் நிலத்தைத் தங்களுடைய நிலங்களாக ஆக்கிக்கொள்ளுகின்றார்கள்; கோவில் சொத்துக்களைச் சொந்த நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ளுகின்றார்கள்; தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தருமகர்த்தாக்கள், கோவில்களின் உடைமைகளைத் தவ[illegible]கொள்ளுகின்றார்கள்; இது தொடர்பாக, ஓரிரு மா[illegible] தமிழக அரசு ஆய்வு செய்து, தகுந்த நடவடிக்கைக[illegible]”

என்று, தமிழக அரசு அ[illegible]சார்பு அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் [illegible]மோரையில் உரையாற்றுகையில் தெரிவித்தார்கள்.

சென்னை — [illegible]மார்க்கத்தில், [illegible] பரசன்ன வேங்கடேச பெருமாள் தேவாலய நிலக்[illegible] உரிமைச் சங்கத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திரு. முத்துக்கிருட்டி[illegible] தலைமை வகித்தார்.

எழும்பூர் சட்டம[illegible] திரு ஏ. வி. பி. ஆ[illegible] முன்னாள் மேயர் அ[illegible], [illegible]சி, திரு. வா. கோவிந்த[illegible] ச் செயலாளர் எம். [illegible] ராமச்சந்திரன் ஆகியோர் [illegible]ர்.

அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“கோவில்களுக்குப் பல ஆண்டுகளாகவே மக்கள் சொத்துக்களை எழுதிவைத்து வருகின்றார்கள்.

கோவில்களுக்கு யார் யார் பணம் கொடுத்துள்ளார்கள்—சொத்துக்களை எழுதி வைத்துள்ளார்கள்—அந்தச் சொத்துக்களின் அளவு என்ன—அவைகளின் வருமானம் எவ்வளவு இருக்கும்—வருவாய் எந்த முறையில் பயன்படுத்தப்படுகிறது—தருமகர்த்தாக்கள் எப்படி நடந்து கொள்ளுகின்றார்கள்—ஒழுங்கு மீறி - சட்டத்தை மீறி நடந்து கொள்ளுகின்றார்களா—ஒழுங்கீனங்களும், ஊழல்களும் செய்[illegible] மீது [illegible] இப்போது[illegible] சட்டம் போதுமா—வேறு சட்டம் போட வேண்டுமா—என்பது பற்றி எல்லாம் தமிழக அரசு விரைவில் சிந்தித்து முடிவு செய்யும்.”

உலக அமைதிக்கு அபாயநிலை

ஐ. நா. செயலாளர் ஊ-தாண்ட் எச்சரிக்கை

[illegible]ன்று — செயலொன்றுமாக செயல்படும் நாடுகளின் போக்குக் குறித்து வருத்தம்

நியூயார்க், மே 31—

“மத்தியக் கிழக்கு வியட்நாம் [illegible] உலக அமைதிக்கு [illegible] அபாய அறிகுறிகளாக இருக்கின்றன. ‘சொல்வது ஒன்று—செய்வது வேறு’ என்பதுதான் இதில் பொதுவான நிலையாக இருக்கிறது”

என்று, ஐ. நா. செயலாளர் ஊ-தாண்ட், ஜினிவாவில் நடைபெறும் சர்வதேச மாநாடு ஒன்றுக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருக்கிறார். அச் செய்தியில் மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

“இந்த நெருக்கடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஐ. நா. உறுப்பினர்கள்; ஐ. நா. சாசனத்திற்கு அவர்கள், பேச்சளவில்தான் ஆதரவு தரத் தயாராக இருக்கிறார்கள்.

“தங்களுடைய சொந்த நலன்கள் பாதிக்கப்படும்போது, ஐ. நா. சாசனத்தின் கொள்கைகளைப் புறக்கணித்து, தங்களுக்கேற்ற நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இதுபோன்று அனைத்து நாடுகளும் பொறுப்புக்களைப் புறக்கணிக்கும் போக்கு தான் உலகப் போரில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது; இன்றும் இந்த போக்கைத்தான் நாம காண்கிறோம்.”

‘இது பிரமாதமா?’

என்போரே—

வேறு எது பிரமாதம்?

புதுக்கோட்டை, மே 31—

“தமிழ்நாட்டில், ‘மூன்று படி அரிசி’ என்று கூறி ஆட்சியைப் பிடித்துவிட்டார்கள்’ எனக் கூறுகிறார்கள்; சரி—மாதந்திறமாக அப்படி வைத்துக் கொள்வோம்; கேரளத்தில் ‘6 படி அரிசி போடுகிறோம்’ எனக் கூறினார் வெற்றி பெற்றார்? மற்ற மாநிலங்களிலும் அப்படியெல்லாம் சொல்லியா வெற்றி பெற்றார்கள்? இதையெல்லாம் காங்கிரசார் சிந்திக்க வேண்டாமா? ‘தோல்விக்கு என்ன காரணம்’ என்பதைக் கண்டுபிடித்தல் காங்கிரசுக்கு நல்லது — நாட்டுக்கும் நல்லது!

“அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடுவார்களாம்! கவிழ்த்தால், பாருக்கக் கெடுமே? நாங்கள் என்ன—பதவிக்கு வந்தவுடன், நல்ல சிலர் பணி வருகிறோம்?—இல்லையே!

“எங்கள் ஆட்சியைக் கவிழ்த்தால், மீண்டும் தலைவர் ஆட்சி வரும்; பிறகு பொதுத் தேர்தல் நடக்கும்! இனி அப்போதைக்கு காமராஜர் பூமியை வைத்தா வரவேற்பார்கள்?

“ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது பிரமாதமான செயல் அல்ல என்கிறார்கள்; அவர்கள் ஏன் அதைச் செய்யவில்லை?

“அமைச்சர்கள் சம்பளத்தை ரூ 500 என்று மாற்றி இருக்கிறோமல்லவா? ‘இது என்ன பிரமாதமா?’ என்கிறார்கள்! காங்கிரசில் அவர்கள் எடுத்த முடிவு என்ன? ‘அமைச்சர்கள் ரூ 500 சம்பளம் வாங்க வேண்டும்’ என்பதுதானே! அவர்கள் நிறைவேற்றாததையெல்லாம் நாங்கள் நிறைவேற்றி வைக்கிறோம்!

“பஸ் கட்டணத்தைக் குறைக்கிறோம்; [illegible] ‘இது ஒரு பிரமாதமான காரியமா?’ என்கிறார்கள்! எதுதான் பிரமாதமான காரியம் என்பது எனக்கே தெரியவில்லை!

“நாங்கள் தவறு செய்தால் தடுத்து நிறுத்தட்டும்! ஆனால், ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று மட்டும் அவர்கள் கனவு காணவேண்டாம்!’

—அறிஞர் அண்ணா

(பொதுக்கூட்டத்தில்)

கேளிக்கை வரி: அரசு உத்தரவு

திருச்சி, மே 30—

சினிமா தியேட்டர்களில் கேளிக்கை வரியும், ‘தனி மேல்வரி (சர்சார்ஜ்)’ம் வசூலிக்கப்படுகிறது.

“கேளிக்கை வரி மீது இதுவரையில் அதிகப்படியாக விதிக்கப்பட்டு வந்த ‘சர்சார்ஜ்’ வசூலிக்கப்பட [illegible] நடவடிக்கை எடுக்கவேண்டும்”

என்று அரசு, நகராட்சி ஆணையர்களுக்கும், டவுன்-ஷிப் அதிகாரிகளுக்கும் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

உறுதிமொழியைத் தமிழக அரசு நிறைவேற்றும்

கோடைக்கானல், மே 30—

‘நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்குவதாகத் தேர்தலில் அளித்த உறுதிமொழியைத் தி. மு. கழக அரசு அமுலாக்கும்’

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், கொடைக்கானலை ஊராட்சி ஒன்றியம் அளித்த வரவேற்புக்கும் பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்தார்கள். அவர் மேலும் கூறியதாவது:—

“12,000 ஏக்கர் நிலத்தை நிலமற்றோருக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிப்போம்; இந்தப் பணியை மேற்கொள்வதற்குத் தனி ஊழியர்களை நியமிப்பதற்கு வேண்டிய பணம் அனுமதிப்போம்.”

168 காங்கிரசார் கட்சியிலிருந்து நீக்கம்

போபால், மே 31—

மத்தியப் பிரதேசத்தில் மட்டும் 168 காங்கிரசுக்காரர்கள், காங்கிரசுக் கட்சியின் அதிகாரபூர்வமான வேட்பாளர்களையே எதிர்த்துப் போட்டியிட்டார்களாம். அவர்களையும் சேர்த்து, காங்கிரசுக் கட்சியின் சட்ட ஒழுங்கை மீறியதாக 168 காங்கிரசுக்காரர்களை கட்சியிலிருந்து தள்ளி வைத்திருக்கிறது.

சமுதாயவளர்ச்சித் திட்டத்தின் தோல்வி

உற்பத்தித் துறையில் உரிய பலன் கிட்டவில்லை

தேசியக் கல்வி நிறுவன ஆய்வு அறிக்கை கூறும் உண்மை

புதுடில்லி மே 31—

“தகுந்த கல்வியின்மூலம் மக்களை முன்னேற்றமடையச் செய்யாததால், விதைகளும்—உரங்களும்—நல்ல உழவுக் கருவிகளும் கொடுக்கப்பட்டபோதிலும், இந்தியாவில் வேளாண்மைத் துறையில் விரும்பிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை; அந்த வகையில் சமுதாய வளர்ச்சித் திட்டம் தோல்வியே கண்டுள்ளது”

என்று, தேசியக் கல்வி நிறுவனத்தின் முதியோர் கல்வித்துறை நடத்திய ஆய்வில் கண்டுணரப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:—

“பெரும் அளவுக்கு விதைகள்—உரங்கள்—உழவுக் கருவிகள்—பூச்சி கொல்லி மருந்துகள் சாகுபடியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டன; இருந்தாலும், பாராட்டத்தக்க அளவில் உற்பத்தியைப் பெருக்குவதில் வெற்றி பெற இயலவில்லை.

“சாகுபடியாளரின் பொருளாதார நடவடிக்கைகளில் விரும்பத்தக்க அளவுக்கு மாற்றம் ஏற்படுத்தத் தவறியதே சமுதாய வளர்ச்சித் திட்டம் தோல்வியுறுவதற்குக் காரணமாகும்.

“தகுந்த கல்வியின் மூலம், மட்டும்தான் சாகுபடியாளர்களின் பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுத்த முடியும். சாகுபடியாளர்களின் தேவை என்ன—சாகுபடியாளர்கள் எதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் என்பவற்றை அடித்தளமாகக் கொண்டதே அந்தக் கல்வியாகும்.

“சாகுபடியாளர்களில் உள்ள இளைஞர்களைக் கேட்டபோது, கல்வியின் தர உயர்வுக்கு ஏற்ப பல்வேறு உற்பத்தி மும் பெருகியுள்ளது என்று தெரிவித்தனர்.

“தீவிரச் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில், ஏக்கருக்கு 37 மணங்களிற்குமேல் சராசரியாக உற்பத்தி பெருகியுள்ளது. இந்தப் பகுதிகளில், கல்வி பெற்ற சாகுபடியாளர்கள் 45-லிருந்து 50 மணங்கள்வரை உற்பத்தி செய்துள்ளனர்.

“சாகுபடியாளர்களுக்கு வேளாண்மை வளர்ச்சிக் கல்வி தேவைப்படுகிறது. சாகுபடியாளர்களுக்கு அந்தக் கல்வி போதிக்கப்பட்ட போதிலும், அதற்குத் தகுந்த பயன் இல்லை.”

பிர்லா நிறுவனத்துக்கு புது லைசென்சு இல்லை?

புதுடில்லி, மே 31—

“தமது மனு அனுமதியை பெறும்வரை இனி, பிர்லாவுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு புதிய லைசென்சு எதுவும் அளிக்கக் கூடாது”

என்று தொழில் வளர்ச்சி—கம்பெனி விவகார அமைச்சர் பக்ருதீன் அலி அகமது [illegible] பிறப்பித்துள்ளார்.

'வணிகப் பயிர்ச் சாகுபடிக்கு எவரும் மாறமாட்டார்'

'தடுக்கும் சட்டமியற்றும் எண்ணம் இல்லை'

புதுக்கோட்டையில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

புதுக்கோட்டை, மே 29—

"உணவுப் பயிருக்குப் பதில் வணிகப் பயிர்ச் சாகுபடி செய்வதைத் தடுக்கும் சட்டமேதவும் இயற்றும் எண்ணம் இல்லை.

"உணவுப் பயிர்ச் சாகுபடி செய்வோர் வணிகப் பயிர்ச் சாகுபடிக்கு மாறுவர் என்று நான் நம்பவில்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நிலைமை என்ன?

'மாவட்ட ரெவினியூ அதிகாரி பதவிகள் நீக்கப்படும்' என்று சில ஏடுகளில் வெளியான செய்தியை அவர் மறுத்தார்.

சமுதாய வளர்ச்சித் துறையில் இருந்து அந்த தேவையற்ற பதவியை நீக்கவே அரசு விரும்பியது என்றும், பல துறைகளிலும் செய்த சீரமைப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் புதிய நியமனங்களில் முன்னுரிமை தரப்படுமென்றும் ஆகவே யாரும் வேலையில்லாமல் ஆகிவிடும் நிலைமை ஏற்படாது என்றும் விளக்கமளித்தார்.

உழவர்களுக்கு இயந்திரக் கலப்பை

தமிழக அரசின் திட்டம்

உழவர்களுக்கு இயந்திரக் கலப்பைகள் வழங்கத் தமிழக அரசு திட்டம் வகுத்துள்ளது.

இந்த மாநிலத்தில், இயந்திரக் கலப்பை வழங்கும் திட்டம் இப்போதுதான் முதன் முதலாகச் செயல்படுத்தப்படுகிறது.

நான்காம் திட்டக் காலம் முழுவதிலும், 150 இயந்திரக் கலப்பைகள் வழங்கப்படும்; அதற்கு முன்னதாக பல்வேறு மாவட்டங்களிலும் இயந்திரக் கலப்பைகளைப் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு மண்வாகு ஏற்றதாக உள்ளதா என்று ஆய்வு நடத்தப்படும்.

பயிற்சி மொழியாகத் தெலுங்கு

ஆந்திர மாநில அரசு முடிவு

ஐந்தாண்டுகளுக்குள் செயல்படுத்தத் திட்டம்

ஐதராபாத், மே 31—

ஆந்திர மாநிலப் பல்கலைக்கழகங்களில் இன்னும் ஐந்து ஆண்டுக்காலத்திற்குள் தெலுங்கு பாடமொழியாக ஆக்கப்படும்.

தற்காலிகமாக மேல்படிப்பு—தொழில் நுட்பக் கல்வி மட்டும் ஆங்கிலத்தில் நடைபெற்று வரும்.

ஆந்திர மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த துணைவேந்தர்கள்—கல்வி அமைச்சர்—கல்வித்துறைச் செயலாளர்—நிதித்துறைச் செயலாளர்—பொதுக் கல்வி இயக்குநர்—உயர்தரக் கல்வி இயக்குநர்—உஸ்மானியா பல்கலைக்கழகம் பதிவாளர் ஆகியோர் அடங்கிய கூட்டத்தை முதலமைச்சர் பிரும்மானந்தரெட்டியார் கூட்டியிருந்தார்; அந்தக் கூட்டத்தில்தான் மேற்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது.

செஞ்சீனாவுக்கு ஆஸ்திரேலியக் கோதுமை

இலண்டன், மே 31—

சீனாவுக்கு 15 இலட்சம் டன் கோதுமையை விற்க ஆஸ்திரேலியா ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது, உணவு சம்பந்தமாகச் சீனா எந்த அளவுக்கு வெளிநாடுகளை நம்பி நிற்கிறது என்பதைக் காட்டுகிறது.

மேற்படி கோதுமையின் மதிப்பு 8 கோடியே 60 இலட்சம் டாலராகும். (சுமார் ரூ 75 கோடி)

ஆஸ்திரேலியக் கோதுமைக்கு தென்கிழக்கு நாடுகளிடமிருந்தும்—குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றிடமிருந்து ஆர்டர்கள் வந்துள்ளன. தென் அமெரிக்காவிலிருந்தும் ஆர்டர் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா தற்போது ரேஷனுக்கு கோதுமை அறுவடை செய்துள்ளது. இந்த விளைச்சல் சுமார் 1 கோடியே 20 இலட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இது, கடந்த விளைச்சலைவிட அதிகம் என்பது டன், 1964-65-ம் ஆண்டின் சாதனை விளைச்சலையும்விட 20 இலட்சம் டன் அதிகமாகும்.

எழுத்தாளர் மாநாடு புறக்கணிப்பு

இலண்டன், மே 30—

மாஸ்கோவில் நடைபெறும் எழுத்தாளர் மாநாட்டை இரஷ்ய எழுத்தாளர் புறக்கணித்தனர்.

இரஷ்ய இலக்கியத் துறைக்கான சுதந்தரத்துக்காக அவர்கள், ஸ்வெட்லானா ஸ்டாலினுடனும், அமெரிக்க இரகசிய அமைப்பான சி.ஐ.ஏ.—வுடனும் சேர்ந்து வேலை செய்வதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

'தேயிலை ஏற்றுமதி பெருக விசித்திர யோசனை!

இலங்கையிலிருந்து மட்டரக தேயிலை இறக்குமதி செய்ய வேண்டுமாம்

கல்கத்தா, மே 31—

"இந்தியா தனது உள்நாட்டுத் தேவையை நிறைவு செய்து கொள்ள இலங்கையிலிருந்து விலை குறைந்த மட்டரகத் தேயிலையை இறக்குமதி செய்ய வேண்டும்"

என்று தேயிலை போர்டு ஒரு யோசனை கூறியுள்ளது.

"பெரும் அளவில் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடான இந்தியா, தேயிலை இறக்குமதி செய்வதா?" என்று கேட்கத் தோன்றும்; ஆனால் இந்த யோசனையானது உலக தேயிலை மார்க்கெட்டின் விசித்திர அம்சங்களை வைத்துக் கூறப்படுவதாகும். சொல்லப் போனால், மேற்படி யோசனையைக் கையாண்டால் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் என்று தேயிலை போர்டு கூறுகிறதாம்.

இந்தியாவில் தேயிலைக்கான உள்நாட்டுத் தேவை அண்மை ஆண்டுகளில் பெருகி வருவதானது, இந்தியத் தேயிலை ஏற்றுமதியை மட்டுப்படுத்தும் பெரிய அம்சங்களில் ஒன்றாகும். உள்நாட்டு உபயோகம் 1965-ல் 36 கோடியே 40 இலட்சம் கிலோகிராமாக இருந்தது. 1966-ல் 40 கோடி கிலோகிராமாக உயர்ந்தது.

இதற்கிடையே இலங்கையிடமோ சாதாரண ரகத் தேயிலை ஏராளமாக உள்ளது; அந்நாட்டினால் அதை எளிதில் விற்றுத் தீர்க்க முடியவில்லை.

தேயிலை ஏற்றுமதியில் இந்தியாவுக்குப் போட்டியாக உள்ள நாடு இலங்கையே ஆகும். உலகில் பெரிய அளவில் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகளில், பெருத்த உள்நாட்டு மார்க்கெட்டைப் பெற்றிராத ஒரே நாடு இலங்கைதான். எனவே அது, தனது தேயிலையை கட்டுபடியாகாத விலையில் வெளிநாடுகளில் விற்கிறது.

எனவே, உலக நாடுகளின் தேயிலைக்கான கிராக்கி இறங்குமுகமாகி அதனால் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுமே பாதிக்கப்படுகின்றன. ஆகவே, இலங்கையின் சாதாரண ரகத் தேயிலையை இந்தியா ஓரளவுக்கு இறக்குமதி செய்தால் உலக மார்க்கெட்டுக்கு இலங்கை செய்யும் தேயிலை ஏற்றுமதி குறையும்; அதனால் உலகில் கிராக்கி அதிகரித்து விலை ஏறும் என்று தேயிலை போர்டு கருதுகிறது.

அப்படி உலக மார்க்கெட்டில் விலைகள் உயர்ந்தால் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதியும் தேயிலையின் யூனிட் விலை அதிகரிப்பதால் வருமானமும் அதிகரிக்கும். —ரேவன்

தாய்மொழியில் கல்வி பயிலுதலே தக்க பலன் தரும்

தமிழ் பயிற்சி மொழியாவதால் ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட முடியாது

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மே 29—

"மக்களுக்குப் புரியும் மொழியில் மாணவர்கள் கல்வி பயின்றால்தான் மக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும்; அதனால்தான், 'எல்லாக் கல்வி மட்டங்களிலும் தாய்மொழியில் பாடம் சொல்ல வேண்டும்' என்று முடிவு செய்திருக்கின்றோம்.

தாய்மொழிதான் பாடமொழி என்று முடிவு செய்யப்பட்டிருப்பதால், 'ஆங்கில மொழி ஆதிக்கம் வகிக்குமோ' என்ற அச்சத்திற்கு இடமில்லை; இனிமேல் ஆங்கிலத்தின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் இருக்கும்"

என்று தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விளக்கினர்.

ஆங்கிலம் பயிற்றுவிக்கும் [illegible] கால நிறுவனத்தின் [illegible] ல் கலைக்கழக [illegible] கட்டிடத்தில் [illegible]

மனித சமுதாயத்திற்குப் பயன் விளைவிக்கும் கருவி

[illegible] துணைத் தூதர் சி. பி. ஈ. காட்ஸ்மித் திறந்து வைத்தார்; அவர் கூறியதாவது:—

"ஒரு பிரதேசத்தின் செல்வம் தன் ஆங்கிலம் என்று கருதக்கூடாது; மனித சமுதாயத்திற்குப் பயன் விளைவிக்கக் கூடிய கருவி ஆங்கில மொழி யாகும்.

உலக நாடுகளில் ஆங்கிலம் பொது மொழியாக இருக்கிறது; அந்த நாட்டு மக்கள், சொந்த மொழியைப் போலவே ஆங்கிலத்தைக் கருதுகின்றனர். அரசாங்க அமைப்புகளிலும், கல்வித் துறையிலும் ஆங்கிலத்தைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர்."

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"கல்வியின் மீதுள்ள அக்கறையாலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆங்கிலம் தேவை என்பதாலும், ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து, ஆங்கிலக் கல்வியைத் தமிழக அரசு ஊக்குவிக்க முடிவு செய்துள்ளது.

ஆங்கிலம் நுழையும்போது அயல் மொழியாகவே இருந்தது; ஆனால், நூறு ஆண்டுகளுக்கு மேலாகவே நமக்கும் — ஆங்கிலத்திற்கும் தொடர்பு இருந்துவருகிறது.

அதனால் இந்திய பாரம்பரியத்தில் ஒரு பகுதியாக ஆங்கிலம் ஆகிவிட்டது.

ஆங்கில மொழியால் நமது கலை வளர்ந்திருக்கிறது; இந்திய மொழிகள் செழிப்படைந்திருக்கின்றன. மொழிக்காகவும், இலக்கியத்திற்காகவும் ஆங்கிலத்தில் நமது மக்கள் நல்ல பயிற்சி பெறவேண்டும்.

மக்கள் தொடர்புள்ள எல்லாத் துறைகளிலும் புதிய அறிவை வடித்தெடுத்துத் தந்திருக்கிறது.

மற்ற உலக மொழிகளின் மதிப்பு வாய்ந்த இலக்கியங்களின் களஞ்சியமாக ஆங்கிலம் இலங்குகிறது.

உண்மையிலேயே அறிவியல் துறையிலும் தொழிலியலிலும் ஆங்கில மொழி தவிர்க்க முடியாத இன்றியமையாமை உடையதாக இருக்கிறது"

அகற்றப்பட்ட சான்றேடுகளைத் திருப்பித் தருக!

டில்லியிடம் மேற்கு வங்க அரசு கோரிக்கை

புதுடில்லி, மே 29—

மத்திய அரசின் ஆணைப்படி மேற்கு வங்க அரசிடமிருந்து டில்லிக்கு அகற்றப்பட்ட குறிப்பிட்ட சான்றேடுகளை, மீண்டும் திருப்பியனுப்பி வைக்குமாறு மேற்கு வங்க அரசு கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்து காவலில் வைப்பது குறித்தும், அதன் தொடர்பாக [illegible] சென்னை சான்றேடுகளில் அடங்கியுள்ளனவாம்.

இந்தச் சான்றேடுகளை மாநில அரசிடமிருந்து பெறத் தனக்குப் போதிய அதிகாரம் இருக்கிறது என்றும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை காரணமாகவே அவற்றைத் தருவித்ததாகவும், மத்திய அரசு வாதிடுகிறதாம்.

கேரளத்திலும் இதேபோல், ஐக்கிய முன்னணி ஆட்சி பதவி ஏற்பதற்கு முன்னதாகச் சில சான்றேடுகள் அகற்றப்பட்டிருக்கின்றன; அப்போது கவர்னரின் பொறுப்பில் நிர்வாகம் இருந்தது; டில்லியின் உத்தரவுக்கேற்ப அவை, கேரளத்தில் உள்ள மத்திய துப்பறியும் துறையிடம் அவை ஒப்படைக்கப்பட்டனவாம்.

இந்த உத்தரவை அனுப்பிய போது மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரசுக் கட்சி அரசுகளே இருந்தன; அப்போது இப்படிப்பட்ட சான்றேடுகளை திருப்பியனுப்புவதால் ஏதும் நடந்து விடாது; ஆனால் இப்போது மத்தியில் காங்கிரசு ஆட்சியும், மாநிலத்தில் ஐக்கிய முன்னணி ஆட்சியும் உள்ளதால், விளைவு வேறு விதமாகும் என்று கருதப்படுகிறதாம்.

ஐ. நா.-வில் நாகர் பிரச்சினை

பிஜோ தரும் தகவல்

நியூயார்க், மே 27—

[illegible] ஏ. இசட். பிஜோ, இனி ஐ. நா.-விலும், அமெரிக்காவிலும் நாகர் பிரச்சினையில் தனது குழுவுக்கு ஆதரவு தேடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்று தெரிகிறது.

அமெரிக்காவில் அவர் யார் யாரைச் சந்தித்துள்ளார் என்பது பற்றி அவரிடம் ஒரு தனிப் பேட்டியின்போது கேட்டதற்கு அவர் திட்டவட்டமாகப் பதில் கூற மறுத்துவிட்டார்.

"ஐ. நா.-வில் அல்லது அமெரிக்காவில் யார் யாரைச் சந்தித்தேன் என்பதை என்னால் கூற முடியாது; ஏனெனில், நான் யாருக்கும் சங்கட நிலையை உண்டாக்க விரும்பவில்லை" என்றார் அவர்.

"எங்கள் தரப்புக்கு நிறைய ஆதரவு காட்டப்பட்டது" என்றார் அவர்.

அவர், ஊதாண்ட் அல்லது ஆசிய—ஆப்பிரிக்கப் பிரதிநிதி குழுக்களின் உறுப்பினர்களைச் சந்தித்தாரா என்பது பற்றிப் பதில் கூற மறுத்துவிட்டார்; எனினும், 'பலரைச் சந்தித்தேன்' என்றார்.

அவர் அதிகாரவட்டாரத்தினரைச் சந்திப்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை; கல்வித்துறை வட்டாரத்திலும் அவர் முயற்சி காட்டி வருகிறார்; கொலம்பியா பல்கலைக்கழகம், டியூக் பல்கலைக்கழகம், வட கரோலினா பல்கலைக்கழகம் உட்பட பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றுள்ளார்.

நாகர்கள் சீனாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும் ஆயுதம் பெறுவதாகக் கூறப்படுவது பற்றிக் கேட்டபோது, 'இந்தியாகூடத்தான் அமெரிக்காவிடமிருந்தும் இரஷ்யாவிடமிருந்தும் ஆயுதங்களைப் பெறுகிறது' என்றார் அவர்.

இந்திய அரசாங்கத்துடன் ஒரு தீர்வைக் காண்பதில், 'நாகர் தேசியக் கவுன்சில்' திறந்த மனம் கொண்டுள்ளதாக பிஜோ சொன்னார்; பிரச்சினையை சமாதான முறையில் தீர்க்க நாகர்கள் விரும்புவதாக அவர் கூறினார், சமரசத் தீர்வுக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி மீது நம்பிக்கை வைத்துள்ளதாக அவர் மறைமுகமாகக் கூறினார்.

"நாகர்கள் அடுத்த செப்டம்பரில் ஐ. நா. சபையில் தங்கள் பிரச்சினையைக் கிளப்பக் கூடும்" என்றும் வதந்திகள் உள்ளன. அது பற்றிக் குறிப்பிடுகையில், 'ஐ. நா. வை. அணுகுவதில், நாகர் தேசியக் கவுன்சில், காலவரம்பு எதையும் நிர்ணயிக்கவில்லை' என்று மட்டும் [illegible] கூறினார். (ரேவன்)

நெருக்கடிக்குள்ளான 4 பஞ்சாலைகள்

ஏற்று நடத்த மத்திய அரசிடம் கோரிக்கை

பெங்களூர், மே 29—

கருநாடக மாநிலத்தில், தொடர்ந்து இயங்கமுடியாமல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்ற நான்கு பஞ்சாலைகளை மத்திய அரசே ஏற்று நடத்தும்படி, மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மாநில நிதியமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அண்மையில் மத்திய வணிகத்துறையமைச்சரைச் சந்தித்துப் பேசிய போது, இந்த ஆலைகள் பொருளாதார நிலையினால் திரும்பிரமாக இயங்கமுடியாத நெருக்கடி ஏற்பட்டிருப்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நான்கு ஆலைகளில் மிகவும் பெரிய ஆலையான குல்பர்காவிலுள்ள எம். எஸ். கே. மில்ஸ், மாநில அரசுக்குச் சொந்தமானதாகும். இது, இந்த மாத ஆரம்பத்தில் மூடப்பட்டது.

தனியாரிடமிருந்த இந்த ஆலையை நான்காண்டுகளுக்கு முன்பு மாநில அரசு வாங்கி நடத்தி வந்தது. இந்த ஆலையைப் புதுப்பிப்பதற்காகவும், நவீன இயந்திரச் சாதனங்களை அமைப்பதற்காகவும் மாநில அரசு ரூ. 2 கோடி வரை செலவழித்துள்ளது.

மத்திய அரசுக் கடனைத் திருப்பித் தரத் தவணை

மொரார்ஜியிடம் அண்ணா வற்புறுத்துவார்

புதுக்கோட்டை, மே 29—

மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெற்றுள்ள நடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இரண்டு அல்லது மூன்றாண்டுகாலம் தவணை கேட்கப்போவதாக முதலமைச்சர் அண்ணா தெரிவித்தார்.

இது தொடர்பாக, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயை ஜூன் 5-ம் நாள் புதுடில்லியில் சந்திக்கவிருப்பதாகவும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தியாவுக்கு இரஷ்யப் போர் விமானங்கள்

அமெரிக்க ஏடு தகவல்

இலண்டன், மே 31—

சோவியத் இரஷ்யா இந்தியாவுக்கு 200 'சுஜாய் 7' என்ற அதிவேகக் குண்டு வீச்சு விமானங்களை விற்க முன்வந்திருப்பதாக 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'தெஹ்ரானிலிருந்து கிடைத்த அதிகாரபூர்வமான செய்தியிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது' என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்தச் செய்தியில், போர் விமானங்களின் விலைகள் பற்றி இந்தியத் தலைமை அமைச்சரும் இந்திய அரசும் ஆலோசித்து வருவதாக [illegible]

சேக் அப்துல்லா

ஜம்முவுக்கு மாற்றப்படுவார்?

புதுடில்லி, மே 31—

இந்தியாவில் அவசர நிலைமை ரத்தாவதற்கு முன்னர், ஷேக் அப்துல்லா, ஜம்முவில் வசதியான ஒரு பங்களாவுக்கு மாற்றப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"அவசர நிலைமை முடிவடைந்த பிறகு அவரை கொடைக்கானலில் தொடர்ந்து வைத்திருக்க முடியாது" என்று முக்கிய வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் ஜம்மு—காஷ்மீர் உட்பட, எல்லைப் பகுதிகளில் இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகள் தொடர்ந்து அமுலில் இருந்துவரும்.

காஷ்மீரின் மாநகரம் பற்றி மத்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் அண்மையில் விவாதித்தனர். ஜம்மு—காஷ்மீரில் இப்போது எதிர்விளைவுகள் எதுவும் ஏற்படாது என்றும், எனவே அவரை ஜம்முவுக்குக் கொண்டு செல்லலாம் என்றும் அவர்கள் முடிவுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

தவிர, எல்லை நிலைமையும் கட்டுக்கடங்கிய நிலையில் உள்ளது. கோடை மாதங்களில் எல்லையில் பனி நீங்கியிருக்கும் [illegible] என்பதால் இப்போது [illegible] சிறு எண்ணிக்கை மிக்க ஊடுருவ முடியாது.

திடீர் தேநீர்!

கேரளத்தில் தொழிற்சாலைகள்

புதுடில்லி, மே 30—

திடீர் தேநீர் உற்பத்தி செய்வதற்காகக் கேரளத்தில் இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை மொத்தம் சுமார் 770 டன் திடீர் தேநீரை உற்பத்தி செய்யும்.

இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் திடீர் தேநீர் முழுதும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். ஆயினும், இவை இன்னும் வர்த்தக ரீதியிலும் உற்பத்தித் தொடங்கவில்லை.

இத்தகவலை வர்த்தக இலாகாத் துணை அமைச்சர் முகம்மது குரேஷி, மாநிலங்களவையில் ஒரு கேள்விக்கும் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

உணர்வோர் உள்ளம்

கூட்டுறவுத் துறையின் கவனத்திற்கு!

ஐயா,

தமிழக அரசு, கூட்டுறவுச் சட்டத்தில், 'கூட்டுறவு நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் ஒரு செயற்குழு உறுப்பினர் பதவி விலைகள் கூடிதம் கொடுத்தால், அவருக்குப் பதில் மற்றொருவரை, எஞ்சியுள்ள செயற்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்து சேர்த்துக் கொள்ளவேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

அங்ஙனம், நியமனம் செய்து சேர்த்துக்கொள்ளப்படுகிறவர்கள் எம்மாதிரிப்பட்டவராயிருக்க வேண்டும்—என்னென்ன தகுதிகள் உடையவராக இருத்தல் வேண்டும் என்று சட்டத்தில் வரையறுத்துக் கூறப்படவில்லை.

இந்தச் சட்டத்தின் துணைகொண்டு ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் அறுதிப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு தொடர்பு இல்லாதவர்களையும்—குறிப்பாகத் தங்களுக்குச் சாதகமாகக் கைதூக்கக்கூடியவர்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். இதனால் செயற்குழு, பொதுமக்களின் பிரதிநிதித்துவத்தை இழந்தாகிவிடுகிறது.

இப்படிப்பட்ட விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தால் நல்லது.

"கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு செயற்குழு உறுப்பினர் பதவி விலகல் கடிதம் கொடுத்தால், அவருக்காக ஏற்கனவே நடைபெற்ற தேர்தலில் நின்று அதிகபட்டியான வாக்குகள் பெற்று வெற்றி வாய்ப்பை இழந்தவர்களையே வரிசைப்படியாக அமர்த்திக்கொள்ள வேண்டும்" என்ற வகையில் சட்டத் திருத்தம் செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

இப்படிச் செய்வதால், தில்லுமுல்லுகள் நடைபெற வாய்ப்பில்லாமல் போகும் என்பது உறுதி.

இதேபோல் இங்குள்ள ஒரு கூட்டுறவு நிறுவனத்தில், கடந்த 1966-ம் ஆண்டில் மட்டும் 12 பேர் பதவி விலகியுள்ளனர்—12 பேர் அங்கு மறுபடியும் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே, தமிழக அரசு இது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எச். தங்கசாமி எம். சி.
புதுக்கோட்டை.

★

'ஆரோக்கிய அரசியல்'வாதிகளுக்கு

ஐயா,

தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள தி.மு.க. அமைச்சரவைப் பற்றி இல்லாத பொல்லாத செய்திகளை வெளியிடுவது காங்கிரசாரின் 'புதுப் பணி'யாக இருக்கிறது என்பதற்கு அவர்கள் செய்தித் தாளில் வந்துள்ள ஒரு செய்தியே எடுத்துக்காட்டாக இருக்கிறது.

தமிழக மேலவையின் உறுப்பினர் எண்ணிக்கையைத் தற்சமயம் உள்ள 63-லிருந்து 78-ஆக உயர்த்தி, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சனநாயகத்துக்கு எதிரான காரியங்களைச் செய்யப்போவதாக ஒரு காங்கிரசு ஏடு கூறுகிறது.

இந்தச் சனநாயக நாட்டிற்கு ஓர் அரசியல் சட்டம் உண்டு. அந்த அரசியல் சட்டப்படி, மேலவை உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தது 40 ஆகவும், அதிக அளவாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில்

மூன்றில் ஒரு பங்கும்

இருக்க வேண்டும். இதுதான் இந்தச் சனநாயக நாட்டின் அரசியல் சட்டம் கூறும் விதியாகும்.

தமிழகத்தில் ஏற்கனவே இருந்த சட்டமன்றத் தொகுதிகளைச் சீரமைப்புச் செய்து புதிதாகத் தொகுதிகளை காங்கிரசாட்சியினர் 234 தொகுதிகளாக உருவாக்கினர். ஆகையினால், தற்சமயம் 234 கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அரசியல் சட்டப்படி, மேலவையில் 78 உறுப்பினர்கள் (எம்.எல்.சி.) இருக்க வேண்டும்.

அரசியல் சட்டம் கூறும் விதியை நிறைவேற்றும்பொழுது தமிழக மேலவையில் காங்கிரசின் எண்ணிக்கை பலம் இதனால் குறைகிறது; ஆதலால், தி. மு. க. அமைச்சரவை மீது காங்கிரசு ஏடு வீண் பழியைப் போடுகிறது.

முற்றிலும் சனநாயக விதிப்படியும் அரசியல் சட்டப்படியுமே இதனைச் செய்து மேலவை எண்ணிக்கையை 63-லிருந்து 78-ஆக தி.மு.க. அமைச்சரவை செயல்படுத்துகிறது.

உண்மை இதுவாக இருக்க, [illegible] கப்படுத்தி, காங்கிரசார் செய்தி வெளியிடுவதேன்?

தமிழகத்தில் உள்ளவர்களுக்கு இவையெல்லாம் தெரியாது — தனக்கு மட்டுமே தெரியும் எனக் காங்கிரசின் 'ஆரோக்கிய அரசியல் வாதி'கள் எண்ணமா?

இந்தத் தவறான எண்ணத்தில் மேலும் செயல்பட்டு, தமிழகத்தின் தூய்மையான அரசியலைக் கெடுத்துவிடாதீர்கள் — என்று காங்கிரசு நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

—க. துரைராசு
நாகை.

★

கல்வித் துறையின் கவனத்திற்கு!

ஐயா,

இந்தித் தேர்வு எழுதுவோருக்கு எவ்வித வயது வரம்பும் குறிப்பிடப்படவில்லை; அதனால் நிறைய பேர் எழுத வாய்ப்புள்ளது. பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போதே ஒரு மாணவன், இந்தியிலும் பல தேர்வுகள் எழுதி முடிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன; ஆனால், தமிழ்ப் புலவர் (வித்துவான்) தேர்வு எழுத அத்தகைய வசதிகள் இல்லை.

'தனிப்பட்டவர் தமிழ்ப் புலவர் தேர்வு எழுத வேண்டுமாயின், 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்' என்ற வயது வரம்பைச் சென்னைப் பல்கலைக் கழகம் விதித்துள்ளது. ஒருவர், தம் முப்பதாவது வயதில் திருமணம் முடித்து ஏதாவது தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டவராகவே இருப்பார்.

அப்படியே, தமிழ்ப்பேல் உள்ள பற்றுதலால் எழுதி வெற்றி பெற்றாலும் வேலை கிடைக்காது; காரணம், மாவட்டக் கழகப் பள்ளிகளை அரசினரே ஏற்றுக்கொண்டுள்ளதால், பணியில் சேருவோர் 25 வயதுக்கு உட்பட்டவராகவே இருத்தல் வேண்டும். அதனால் வேலையும் கிடைக்காது. வேலை கிடைக்காதபோது தேர்வு எழுத யாராவது முன்வருவார்களா?

இப்பொழுதுள்ள அரசு தமிழ் மீது மிகுந்த பற்றுள்ளது என்பதை அனைவரும் அறிவர். தமிழுக்கு உயர்வு தரவேண்டுமாயின், தமிழ்த் தேர்வு எழுதுவோருக்கு விதிக்கப்பட்டுள்ள வயது வரம்பை பதினெட்டாகக் குறைக்க வேண்டும். அப்பொழுதான், பதினெட்டாவது வயதில் 'முதனிலைத் தேர்வு' எழுதி வெற்றி பெற்று—இரண்டாண்டுகள் கழித்து 'இறுதி நிலைத் தேர்வு' எழுதி—இருபத்தொன்றாவது வயதிலோ, அல்லது தவறினால் இருபத்து மூன்றாவது வயதுக்குள்ளாகவோ வெற்றி பெற இயலும். இருபத்தைந்துக்குள் முடித்துவிடுவதால் வேலை கிடைக்க வசதியும் ஏற்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி வயது வரம்பைக் குறைத்தால் உறுதியாக, தமிழ்த் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை பெருகும்.

இதை, தமிழக அரசும், பல்கலைக் கழகமும் ஆய்வு செய்து செயலாற்றுமாறு வேண்டுகின்றேன்.

மணிவேலன்
அகர

அரிசி இறக்குமதி

மத்திய அரசு திட்டம்

புதுடில்லி, மே 30—

மூன்றரை இலட்சம் டன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்திருப்பதாக உணவு—விவசாய அமைச்சர் ஜெகஜீவன்ராம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பர்மா, தாய்லாந்து, கம்போடியா, பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இந்த அரிசி, இவ்வாண்டின் இரண்டாவது பகுதியில் வந்து சேரும்.

பர்மாவிலிருந்து மட்டும் 1,50,000 டன் அரிசி வரும்.

மாநில அரசுகள் நிலை

"வெளி நாடுகளிலிருந்து நேரடியாக அரிசி இறக்குமதி செய்ய எந்த மாநில அரசும் அனுமதிக்கப்படமாட்டாது"

என்று உணவுத்துறை அமைச்சர் செகசீவன்ராம் மாநிலங்களவையில் கண்டிப்பாகத் தெரிவித்தார்.

"எந்த மாநில அரசுகளிடமிருந்தும் இதுவரையில் இதுபோன்ற கோரிக்கை வரவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

கெய்ரோவிலிருந்து வெளியேற்றம்!

கெய்ரோ, மே 31—

கெய்ரோவிலுள்ள அமெரிக்க இராசதந்திரிகளின் குடும்பத்தினரில் முதல் குழு ஏதென்சுக்குப் பயணமாகிவிட்டது; அவர்களின் எண்ணிக்கை 1,400 ஆகும்; மீதியுள்ளவர்கள் அடுத்த வாரம் கிளம்புவர்.

பிரிட்டிஷ் இராசதந்திரிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் முதல் குழு சனியன்று விமானம் மூலம் இலண்டனுக்குப் பயணமாகியது; அவர்களின் எண்ணிக்கை 24 ஆகும். —ரேவன்

நாமக்கல் பஸ் விபத்து

மாண்டோர் குடும்பங்கட்கு க. அன்பழகன் ஆறுதல்

புதுடில்லி, மே 29—

நாமக்கல் அருகில் ஏற்பட்ட பஸ் விபத்துக் குறித்து நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவரும், திருச்செங்கோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. க. அன்பழகன் அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:—

"கடந்த 27-ம் நாளன்று நாமக்கல் அருகில் ஏற்பட்ட நெஞ்சுருக்கும் நிகழ்ச்சி அறிந்து திடுக்குற்றேன்.

"இந்தப் பஸ் விபத்துக்கு ஆளாகி மாய்ந்தோர் எண்ணிக்கை என் வேதனையை மேலும் அதிகப்படுத்திவிட்டது.

"விபத்துக்குள்ளாகி மாண்டவர் குடும்பங்களின் துயரத்தில் நானும் பங்கு கொள்கிறேன்; படுகாயமுற்றும் சிறு காயங்களுக்கு ஆளாகியும் இன்னல்களுக்கு ஆளானவர்களுக்கு எனது பரிவையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

டாக்டர் மா. இராசமாணிக்கனார் மறைவு— அறிஞர்கள், மன்றங்கள் இறுதி வணக்கம்

பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் 26—5—67-ல் சென்னை பெரிய மருத்துவமனையில் மாரடைப்பால் இயற்கையெய்தினார். 27—5—67-ல் டாக்டர் அவர்களின் உடல் இறுதி ஊர்வலம் தொடங்கியது. ஈடுகாட்டில் பலதுறை அறிஞர்கள் தங்கள் மன நெகிழ்வைக் கண்ணீருடன் காணிக்கையாகச் செலுத்தினர்.

மறைந்த ஆராய்ச்சி அறிஞர் அவர்களின் சாசன—கல்வெட்டு ஆராய்ச்சி புலமைத் திறன் குறித்தும், அயராத தனி முயற்சியைப் பற்றியும், உழைப்பால் உயர்ந்து இலட்சியங்களை நிறைவேற்ற நலன்களைப் பற்றியும், ஆரம்பப் பள்ளி ஆசிரியராய்—உயர்நிலைப் பள்ளி ஆசிரியராய்—கல்லூரியில் பேராசிரியராய் — இறுதியாகச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி இணைத் தமிழ்ப் பேராசிரியராய்—கல்லூரி பாடநூல் ஆய்வாளராகத் திகழ்ந்து தமிழ் இலக்கியத்திற்கு, தமிழர் பண்பாட்டுத் துறைக்கும், கல்வெட்டு ஆராய்ச்சித் துறைக்கும், கலை ஆராய்ச்சி வரலாற்று ஆராய்ச்சி முதலிய துறைகளில் அவர்கள் துறைபோய நற்புலமை பெற்று விளங்கிய சீர்மை குறித்தும், கலைத் துறைக்கு அவர் செய்த நற்பணிகள் குறித்தும் சைவ சமயத் துறைக்கு அவர்கள் செய்த தொண்டுகள் பற்றியும் பலர் பாராட்டினர்.

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் பேராசிரியர் டாக்டர் கோ. சண்முகசுந்தரம், திரு டி. கே. சண்முகம், பேராசிரியர் ஆலாலசுந்தரம், பேராசிரியர் அருள்சாமி, டாக்டர் குமாரசுவாமி, திரு. கி. இராமலிங்கனார், பேராசிரியர் மு. க. தங்கவேலனார், திரு. வ. கண்ணையா, பேராசிரியர் மி. பொன். இராமநாதன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் சார்பில் திரு. வீரப்பன், புலவர் பழனி மாசுந்தரனார் முதலியோர்கள் வணக்க உரை செலுத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், மாணவர் மன்றம், தமிழ் ஆசிரியர் கழகம், புலவர் மன்றம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நக்கீரர் கழகம், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு, சித்த வைத்திய சங்கம் முதலிய பல்வேறு மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

சென்னை வானொலி நிலையத்திலிருந்து, மறைந்த டாக்டர் மா. இராசமாணிக்கனாருக்கு 26—5—67 இரவு திரு. ம. பொ. சிவஞானம், டாக்டர் கே. கே. பிள்ளை, திரு. ம. ப. பெரியசாமித் தூரன் முதலியோர், அஞ்சல் உரை நிகழ்த்தினர்.

ஈடுகாட்டில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்கள்—தமிழர் இயக்க அன்பர்கள்—பேராசிரியர்கள்—கலைஞர்கள் கூடியிருந்தனர்.

அரிக்க சான்றோராய் விளங்கினார்.

பெருமுற்ற ஏழமை நீங்கி பொருள் உள்ள புதுமை சமுதாயத்தில் இடம்பெற வேண்டும் என்ற தூய குறிக்கோளோடு இறுதிவரை தொண்டாற்றி வந்தார்.

இன்முகமும் இரக்க உள்ளமும் கொண்ட டாக்டர், ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கிடைத்தற்கரிய அருநூலாக விளங்கினார்.

மாணவர்களிடம் தாயின் பரிவும் தந்தையின் அன்பும் காட்டி ஆராய்ச்சித்துறையில் அவர்களை ஆர்வத்துடன், பணிபுரியச் செய்தார்.

'பெரிய புராண' ஆராய்ச்சியும், 'தமிழர் திருமணத்தில் தாலி' பற்றிய ஆராய்ச்சியும் தமிழ் உலகத்தில் அவர் பெயரை நிலைத்து நிற்கச் செய்தன.

இலட்சியமும் வரலாறும் அவர் இரு கண்களாக விளங்கின.

தலை-சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்களால் தமிழ்த் துறையில் தம் இலச்சினையைப் பொறித்தவர் டாக்டர் அவர்கள்.

தமிழ் மாணவர்கள் பின்பற்றத்தக்க பெருந்தன்மையும் பண்புள்ளமும் கொண்ட எடுத்துக்காட்டான பேராசிரியர் டாக்டர் அவர்கள்.

தமிழக வரலாற்றினைச் செம்மையான முறையில் முழு வடிவில் உருவாக்க வேண்டுமென்பது மூதறிஞர் இராசமாணிக்கனாரின் பெரு விருப்பம். அவ் விருப்பத்தினை நிறைவேற்றி வைப்பது தமிழ் அறிஞர்களின் நீங்காக் கடமையாகும்.

தமிழ் இலக்கிய வானில் உலா வந்த நிலா, மறைந்துவிட்டது! இனிமைத் தமிழை ஒலித்த மணிநா ஓய்ந்துவிட்டது!

முத்தமிழ்ச் சாலையில் வெற்றி நடை நடந்த முடிமன்னன் ஆட்சி முடிந்துவிட்டது!

தமிழன்னை தன் தவ மகனைத் தன்னிடமே அழைத்துக் கொண்டுவிட்டாள்!

டாக்டர் அவர்கள், உழைப்பால் உயர்ந்த உத்தமர் ஆவார்!

மூத்துயர்ந்த இவ்வயதிலும் அவர் மேற்கொண்ட கடுமையான உழைப்புதான் அவர்தம் இந்த இறப்பிற்குக் காரணமாயிற்று. முடிந்த அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றித் தொண்டாற்ற வேண்டியது தமிழ் மக்கள் கடமையாகும்.

டாக்டர் அவர்கள் தமிழ்நாட்டின் பொதுச் சொத்து. தமிழிருக்கும்வரை அவர் புகழிருக்கும்! நெஞ்சிருக்கும்வரை நினைப்பிருக்கும்!

★

மக்கள் பேராசிரியர் மறைந்தார்!

டாக்டர் மா. இராசமாணிக்கனார் மறைவு குறித்து, மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் எழுதுவதாவது:—

தமிழகத்தின் தலைசிறந்த ஆராய்ச்சியாளரான டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களின் எதிர்பாரா மறைவு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் அவர்களின் பெரும் பிரிவு தமிழ் உலகில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் பொதுமக்கள் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்ற மக்கள் பேராசிரியர் ஆவார். [illegible] ஆராய்ச்சிக் கருத்துக்களும் பொதுமக்கள் அறிந்து [illegible] பெற வேண்டும்' என்பதற்காக எளிய—இனிய நடையில் எழுதியும் பேசியும் வந்தார். [illegible] இலக்கியத் துறையில் [illegible] தமக்கும் புலவர்களுக்கும் நல்லதொரு தொடர்பு ஏற்பட்டது.

செந்தமிழ்ப் புலமையோடு சீர்திருத்த உள்ளமும் கொண்ட பேராசிரியர் அவர்கள், பழந்தமிழர் திருமணமுறையை மீண்டும் நாட்டில் பரப்பினார்கள். அவர்கள் திருமண முறையில் மணமுடித்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள், இன்று அப்பெருந்தகையாரை வாயார வாழ்த்திக் கொண்டிருக்கின்றன.

எல்லாத் துறைகளிலும் தமிழ் மணம் கமழும் தமிழ்நாட்டைக் காணக் கனவு கண்டவர் டாக்டர்; அத்தமிழரசு மலர்ந்து மணம் பரப்புவதைத் தம் கண்ணாரக் கண்டபிறகு கண்ணை மூடினார். அவரின் நெடுநாளையக் கனவு இன்றையத் தமிழக அரசால் நிறைவேறியது என்ற மன அமைதி அவருக்கு இறுதி நேரத்தில் இருந்தது.

மொழித் தொண்டும், சமுதாயத் தொண்டும் ஆற்றி மூத்துயர்ந்த முதுபெரும் புலவரா [illegible]

வேடசந்தூரில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்புக் கூட்டம்

வேடசந்தூர் திறந்தவெளி அரங்கில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பி. கே. எம். அப்துல்காதர் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

செயலாளர் வி. நாகசுந்தரம் வரவேற்றார்.

திருவாளர்கள் மு. காதர்சா பி.ஏ., டாக்டர் முனியப்பன் எம்.பி.பி.எஸ்., ஆ. முத்துசாமி பி.ஏ.பி.எல்., கருப்பு இரத்தினம், இரா. இராமலிங்கம் பி.ஏ.பி.எல்., எம். கே. ஏ. சாமி ஆகியோர் பேசினர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வி. எஸ். எஸ். மணி, கே. கிருஷ்ணமூர்த்தி, என். பாச்சிமுத்து, பி. எஸ். மணியன், ஒ. பி. இராமன் ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி., இன்றைய அரசியல் சூழ்நிலைபற்றி உரை நிகழ்த்தினார்.

சென்னை 77-வது வட்ட எம்.ஜி.ஆர். மன்றம்

சென்னை 77-வது வட்ட பெரிய மலையப்பன் தெருவில் 7—5—67-ல் வட்ட தி.மு.க. செயலாளர் எம். சீனிவாசன் தலைமையில் இரே. இளம்பரிதி, எம்.ஜி.ஆர். மன்றத்தைத் திறந்துவைத்தார். பகுதித் துணைச் செயலாளர் கே. எஸ். பாண்டியன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

எஸ். ஏ. க ஜா மொய்தீன் எம்.சி., எம்.ஜி.ஆர். படத்தைத் திறந்துவைத்தார்.

பி. ஆர். நாகராசன் எம்.சி. இ. ஆர். நெடுஞ்செழியன், மன்றச் செயலாளர் ஏ. சிவலிங்கம் ஆகியோர் உரையாற்றினர் தோழர் செயபால் நன்றி கூறினார்.

நிர்வாகிகள் தேர்வு

வட்ட தி.மு.க. செயலாளர் எம். சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலில் கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— அவைத் தலைவர்: செயபால்; செயலாளர்: ஏ. சிவலிங்கம்; துணைச் செயலாளர்: டி. ஆர். தேவராசு; பொருளாளர்: ஜி. கங்காதரன்; மற்றும் 5 பேர் செயற்குழு உறுப்பினர் [illegible]

லைசென்சை புதுப்பிக்காமல் துப்பாக்கி வைத்திருந்தார் இராதா

நீதிமன்றத்தில் போலீசுக் கமிஷனர் அலுவலக எழுத்தர் சாட்சியம்

சென்னை, மே 29—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனைச் சுட்டுக்கொல்ல முயன்றதாகவும், தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும் நடிகர் எம். ஆர். இராதா மீது காவல் துறையினரால் தொடரப்பட்ட வழக்கு, சைதாப்பேட்டை முதலாவது மாஜிஸ்திரேட் குப்புசாமி அவர்கள் முன்னிலையில் இன்று விசாரணைக்கு வந்தது.

அரசுத் தரப்பு ஐந்தாவது சாட்சியாக போலீசுக் கமிஷனர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றும் எம். பாலசண்முகம் என்பவர் விசாரிக்கப்பட்டபோது, அரசு வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவரைக் கேட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:—

கே:—நீங்கள் யார்?

ப:—நான் போலீசுக் கமிஷனர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றுகிறேன். லைசென்சு வழங்கும் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன்.

கே:—என்ன லைசென்சு வழங்கும் துறையில் பணியாற்றுகிறீர்?

ப:—ஆயுதங்களுக்கு லைசென்சு வழங்கும் பணியைக் கவனித்துக்கொண்டு வருகிறேன்.

கே:—இந்த லைசென்சு யாரால் வழங்கப்பட்டது? யாருக்கு யாரால், எப்போது வழங்கப்பட்டது?

ப:—இந்த லைசென்சு இராசகோபால் நாயுடு மகன் எம். ஆர். இராதாவுக்குப் போலீசுக் கமிஷனரால் 26—11—64-ல் வழங்கப்பட்டது. அவர், தேனாம்பேட்டை வைஸ் ரோடு, எண் 23-ல் வசிக்கிறார். இந்த லைசென்சு உத்தரவு 31—12—67 வரை செல்லுபடியாகும்.

கே:—இந்தத் துப்பாக்கி என்ன ரகத்தைச் சேர்ந்தது என்று சொல்லமுடியுமா?

ப:—அது 100-வது ரகத்தைச் சேர்ந்தது. (அதுபற்றி விளக்கினார்)

கே:—லைசென்சு முடிவடையும் (31—3—65) காலத்தில் அவர், ரிவால்வரை ஒப்படைத்தாரா?

ப:—லைசென்சு முடிவுற்ற காலத்தில் அவர் துப்பாக்கியை ஒப்படைக்கவில்லை. 31—3—65 வரை அந்தக் காலம் நீடிக்கப்பட்டது; 18—3—65-ல் அவர், பரிசோதனைக்காக அதைத் தாக்கல் செய்தார்.

கே:—ரிவால்வர் யாரிடமிருந்து வாங்கப்பட்டது எனக் கூற முடியுமா?

ப:—சென்னை மிருபோக் ரோடில் வசிக்கும் ஆர். ஆர். சந்திரன் என்பவரிடமிருந்து அந்த ரிவால்வர் வாங்கப்பட்டது; ரூ. 2,200 க்கு இராதா வாங்கினார்.

கே:—அந்த ரிவால்வர் லைசென்சு எந்தக் காலம்வரை செல்லுபடியாகும்?

ப:—30—12—65-வரை செல்லுபடியாகும். அதற்குப் பிறகு அந்த லைசென்சு புதுப்பிக்கப்படவில்லை.

கே:—இந்த லைசென்சு புதுப்பிக்கப்படாததால், எப்போது சோதனை செய்யப்பட்டது? யார் செய்தார்கள்?

ப:—தேனாம்பேட்டை போலீசு சப்-இன்ஸ்பெக்டர் இது சம்பந்தமான குறிப்பேடுகளைப் பரிசோதனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

கே:—அதற்கேற்ப தகவலேதும் தந்தாரா?

ப:—அவர் பரிசோதனை செய்து அறிக்கை ஏதும் அனுப்பவில்லை.

கே:—மறுபடியும் அதே போலீசு நிலையத்திற்குப் பரிசோதனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதா?

ப:—கேட்டுக் கொள்ளப்பட்டது; ஆனால் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திலிருந்து ஏதும் பதிலே வரவில்லை.

கே:—இதுபோல் பல தடவை கேட்டீர்களா?

ப:—பலமுறை கேட்டும் சம்பந்தப்பட்ட போலீசுத்துறையினர் பரிசோதனை செய்து தகவல் அனுப்பவில்லை.

கே:—எந்தத் தேதிவரை அந்த லைசென்சு புதுப்பிக்கப்படவில்லை?

ப:—இன்றையத் தேதிவரை அந்த லைசென்சு புதுப்பிக்கப்படவில்லை.

கே:—இதற்காக சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

ப:—நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கே:—இந்த ரிவால்வரைப் பாருங்கள்: இது யாருடையது?

ப:—இது, இராதாவுடைய ரிவால்வர்.

கே:—எப்படிச் சொல்கிறீர்கள்?

ப:—A 59879 என்ற நெம்பர் லைசென்சு பெற்ற ரிவால்வர், இராதாவுடையது. அந்த நெம்பர் இந்த ரிவால்வரில் உள்ளதால், இராதாவுடைய துப்பாக்கி யாகும்.

கே:—இதற்குத்தான் லைசென்சு வழங்கினீர்களா?

ப:—ஆமாம்; இதற்குத்தான் லைசென்சு வழங்கப்பட்டது.

கே:—இந்தத் துப்பாக்கி யாருடையது என்று சொல்லமுடியுமா?

ப:—எம். ஜி. இராமச்சந்திரனுடைய துப்பாக்கி இது.

கே:— எப்படிச் சொல்லுகிறீர்கள்?

ப:—A. 89626 என்ற நெம்பர் லைசென்சு பெற்ற துப்பாக்கி இது. இந்த லைசென்சு இராமச்சந்திரனால் பெறப்பட்டதால் இது அவருடைய துப்பாக்கியாகும்.

கே:—எங்கே வாங்கப்பட்ட துப்பாக்கி இது?

ப:—பி. ஆர். அண்டு சன்ஸ் கம்பெனியில் வாங்கப்பட்டது.

கே:—எப்போது வாங்கப்பட்டது.

ப:—8-9-56-ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. அன்றே லைசென்சும் பெறப்பட்டது.

கே:—இந்தத் துப்பாக்கிக்கு இன்று வரை லைசென்சு இருக்கிறதா?

ப:—31—12—67 வரை எம். ஜி. இராமச்சந்திரன் துப்பாக்கிக்கு லைசென்சு இருக்கிறது.

கே:—இந்தத் துப்பாக்கி எப்படிப்பட்ட அமைப்பை உடையது?

ப:—பாக்கெட்சைஸ் அமைப்பை உடைய துப்பாக்கி இது.

கே:—நீர் போலீசாரால் விசாரிக்கப்பட்டீரா?

ப:—இல்லை; எனது அலுவலகத்தில் குற்றப்பிரிவுத் துறையைச் சேர்ந்த டிபுடி கமிஷனர் [illegible] வேண்டு அவர்களால் விசாரிக்கப்பட்டேன். நான் எனது இலாகாவினரால் அரசாங்கத்தின் சாட்சியாக அனுப்பப்பட்டேன்.

கே:—அதற்கான உத்தரவு ஏதாவது உமது அலுவலகத்தினரால் கொடுக்கப்பட்டதா?

ப:—ஆமாம்.

கே:—இதுதான் அந்த உத்தரவா?

ப:—ஆமாம்; இதுதான் அந்த உத்தரவின் நகல்.

ஐந்தாவது சாட்சியை இராதா தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

டபிள்யூ. ஆர். சந்தானம்

அடுத்து 6-வது சாட்சியாக சைதாப்பேட்டை நீதிமன்ற எழுத்தரான டபிள்யூ. ஆர். சந்தான கிருஷ்ணன் விசாரிக்கப்பட்டார். அவரை அரசு வழக்குரைஞர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன் கேட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:—

கே:—நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?

ப:—சைதாப்பேட்டை நீதிமன்ற குமாஸ்தாவாக வேலை செய்கிறேன்.

கே:—ரிவால்வரில் சுடப்படாத மூன்று தோட்டாக்கள் இருந்தனவே—அது என்ன ஆயிற்று?

ப:—(இந்தத் தோட்டாக்களை சாட்சி அடையாளம் காட்டினார்) இந்த ரிவால்வர் A59879 நெம்பருடையது. ஆறு தோட்டாக்களை உள்ளே அடைத்து வைக்கும் அமைப்பை உடையது.

இராதா ரிவால்வரிலுள்ள சுட்ட தோட்டாக்கள்—சுடாத தோட்டாக்கள் — இராதா அணிந்திருந்த பனியன் — வாசு போட்டிருந்த கதர் சட்டை புரட்சி நடிகர் வீட்டு வரவேற்பு அறையில் கீழே விரிக்கப்பட்டிருந்த லினோலின் என்ற விரிப்பின் ஒரு பகுதி அண்டு—ஒரு புட்டியில் மாதிரிக்காக எடுத்து அடைத்து வைக்கப்பட்டிருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இரத்தம், இராதாவின் இரத்தம் — 'என்னுடைய முடிவு' என்ற கடிதத்தின் இரண்டு பக்கங்கள்—இரத்தக் கறை படிந்த இராதாவின் போர்வை—எம். ஜி. ஆர். துப்பாக்கி — ஆகியவற்றை இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பியதாக சாட்சி குறிப்பிட்டார்.)

கே:—நடிகர் இராதாவின் இந்தக் கடிதங்கள் எப்போது உங்கள் பார்வைக்கு வந்தன?

ப:—19—1—67 அன்று அது என் [illegible]

மாஜிஸ்திரேட் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளார்.

இந்தச் சாட்சியையும் இராதாவின் வழக்கறிஞர்களுக்கு விசாரணை செய்யவில்லை.

அடுத்து சைதாப்பேட்டை நீதிமன்ற எழுத்தரான காசிநாதன் விசாரிக்கப்பட்டார்.

முத்து நாடார் சாட்சியம்

23—5—67 அன்று நடிகர் எம். ஆர். இராதாவின் தோட்டத்து வேலைக்காரர் முத்து நாடார் விசாரிக்கப்பட்டார்.

இலட்சுமணன் சாட்சியம்

அதற்குப்பின் காவல் துறையைச் சேர்ந்த எட்காண்ஸ்டபிள் இலட்சுமணன் விசாரிக்கப்பட்டார்; அவர், எம். ஆர். இராதாவின் இரகசியக் கடிதம் ஒன்றைப் படித்து நீதிமன்றத்தில் அதைத் தாக்கல் செய்தார்.

எட்காண்ஸ்டபிள் இலட்சுமணன் தாக்கல் செய்த அந்தக் கடிதம் 4 பக்கங்களைக் கொண்டது மூன்று பக்கங்கள் கார்பன் ஷீட்டு வைத்தும், ஒரு பக்கம் பேனாவாலும் எழுதப்பட்டு இருந்தன; நான்கு பக்கங்களிலும் இராதாவின் கையெழுத்து ஆங்கிலத்தில் போடப்பட்டு இருந்தது.

அந்தக் கடிதத்தில் பல பரபரப்பான தகவல்கள் இருந்தன; அந்தக் கடிதத்தைப் போலீசு எட்காண்ஸ்டபிள் கோர்ட்டில் படித்ததின் விபரம் வருமாறு:—

என்னுடைய மடிவு

"நான் ஆறு மாத காலமாக அரசியல் நிலையைப் படித்துப் பார்க்கவில்லை; வருமான வரித் தொல்லைகள் பலவற்றுலும் அதைச் சரி செய்யவேண்டியிருந்தமையினுலும் நான் திராவிட கழகக் கருத்துக்களை சரிவரப் புரிந்து கொள்வதற்கு நேரமில்லை.

1967-ம் வருடம் சனவரி மாதம் 8-ந் தேதி சென்னையில், எம். ஆர். இராதா மன்றத்தில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் அறிவுத் தந்தை பெரியார் அவர்கள் கலந்துகொள்கிறார் என்றும், [illegible] அதற்குக் கண்டிப்பாய் [illegible] சென்னை திராவிடர் கழகத் திரு. டி. எம். சண்முகம் அவர்களும், மற்ற தோழர்களும் கேட்டுக்கொண்டார்கள்.

மாநாடு

அதைத் தட்டமுடியாமல் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தந்தை பெரியார் தலைமையில் அந்தக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. மகாபலிபுரம் பார்ப்பதற்கும் சினிமாவில் நடிக்கும் நடிக-நடிகைகளைப் பார்ப்பதற்காகவும், சென்னையைச் சுற்றிப்பார்த்துவிட்டு—கண்ட ஓட்டல்களில் தின்றுவிட்டு—மாஷாகச் சுற்றிக்கொண்டு போகக் கூடிய பொறுப்பற்ற மக்கள் பஸ்ஸையும் லாரியையும் எடுத்துக்கொண்டு அங்கே வரவில்லை; நல்ல பத்திரிகைக்காரர்கள் மட்டுமே அங்கு இருந்தார்கள்.

நல்ல அறிவுள்ள மக்களே அங்கு வந்திருந்தார்கள். என்னுடைய கழக அனுபவத்திலே முன்னெல்லாம் திராவிட கழகத் தோழர்கள், அவர்களுடைய கருத்துக்களைப் பேசுவார்கள்; நானும் கழகக் கருத்துக்களைத்தான் பேசி வந்தேன்.

ஆனால் 1967-ம் ஆண்டு சனவரி மாதம் 8-ந்தேதி நடந்த மாநாட்டில், யாருடைய கருத்துக்களும் பேசப்படவில்லை. ஒவ்வொரு பத்திரிகைகளின் உண்மைகளை எடுத்துப் பேசினார்களே தவிர, அவர்களுடைய சுய கருத்துக்கள் பேசப்படவில்லை.

புதிய சாட்சி

பத்திரிகைகளின் நிலவரங்களை எடுத்துப் பேசியவர்கள், ஆனைமுத்து, திருவாரூர் தங்கராசு, திருக்குறள் முனுசாமி, புலவர் பாலசுந்தரம், திருச்சி நன்னர், வீரமணி, அன்று தான் அது எனக்கு சுப்ரீம் கோர்ட்டாகக் காட்சியளித்தது. இந்த 6 திராவிட கழகத் தோழர்களும், வட நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளையும் நம நாட்டுப் பத்திரிகைகளையும், நம் நாட்டுத் தலைவர்களைப் புகழக்கூடிய வார்த்தைகளையும் படித்தார்கள்.

வட நாட்டுப் பத்திரிகைகள் நம் நாட்டுத் தலைவரை அழிப்பதற்காக உள்ள வாசகங் [illegible]

களைப் படித்தார்கள். நம் நாட்டுப் பத்திரிகைகளில் வட நாட்டுப் பார்ப்பனர்களுடைய கருத்துக்களையும், நம் நாட்டுப் பார்ப்பனர்களுடைய கருத்துக்களையும் ஒன்று சேர்த்து எழுதியுள்ள வாசகங்களையும் படித்தார்கள்.

தென்னாட்டுப் பார்ப்பனர்களுடைய தலைவர் இராசகோபாலாச்சாரியினுடைய கருத்துக்களையும் படித்தார்கள்.

காமராசர்

நாம் உயர்ந்த நிலைக்கு வருவதற்குக் காரணம் நான் மட்டுமல்ல; நம் தமிழர்கள் அனைவரும் இந்த உயர்ந்த நிலைக்கு வருவதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்களுடைய பிரசாரம்தான், அதை அரசியலில் சட்டமாக்கிக்கொண்டு வருகிறார் காமராசர்.

இந்த நிலை வளர்ந்தபிறகு, பொறுமையின் காரணமாக இராசகோபாலாச்சாரி, தன் பிரச்சாரக் கூட்டத்தில், 'காங்கிரசை ஒழித்துக் கட்டுங்கள்; பிறகு எது நடந்தாலும் நடக்கும்; அராஜகத்தனம் நடந்தாலும் நடக்கட்டும்; நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று தைரியமாகச் சொல்கிறார். அவர் பக்கத் துணையாக நம்மிடையே இருந்து பிரிந்து சென்றவர்களைக் கைக்கூலிகளாக வைத்துக்கொண்டு பேசிக்கொண்டு வருகிறார்.

அழிக்க....!

முன்னெல்லாம் பாண்டிச்சேரியில் தேர்தல் நடந்தால் ஒழுக்கமுள்ள குடும்பமாக இருக்கக் கூடியவர்கள்—நல்லவர்கள் ஊரைவிட்டே போய் விடுவார்கள். தேர்தல் முடிந்து 3 மாதம் கழித்துத்தான் ஊருக்கு வருவார்கள்.

ஏனென்றால், அராஜகத்தனம், கொலை எல்லாம் நடக்கும் அங்கே! அதைப்போல் காங்கிரசில் உள்ள தலைவர்கள் — பொதுவாக மரியாதையை விரும்பக்கூடியவர்கள் எல்லாம் தேர்தல் நேரத்தில் போய்விடுவார்கள்.

பிறகு ரவுடி — திருட்டு — கொள்ளை செய்யக்கூடியவர்கள்—தாய் தந்தை பெயர் தெரியாதவர்கள்—இவர்கள் [illegible] கொண்டு நல்லவர்களால் ஏற்படுத்திய காங்கிரசைக் கவிழ்ப்பதற்கு நல்லவர்களை அழிக்கப் பார்க்கிறார்கள். வடவர்களும் காமராசரை அழிக்கப் பார்க்கிறார்கள்.

வடவருக்கு முன்பே தென்னாட்டில் உள்ள கூத்தாடிகள்—இந்த அரசியல் வந்த பிறகு மேன்மைக்குக் கலைஞர்கள் என்று பட்டத்துடன் வந்தவர்கள்—இவரை (காமராசரை) ஒழிப்பதற்கு, முன்பே சதித் திட்டம் தீட்டியிருக்கிறார்கள்.

அதை, 'நாத்திகம்' என்ற பத்திரிகையில்...... தேதியில் ஆள் பெயரைச் சொல்லாமல் நான் வெளியிட்டு இருக்கிறேன்.

இன்று, அதே கலைஞர்கள் என்ற கூத்தாடிகள், இந்த காங்கிரசுத் தலைவரைச் சுட்டு வீழ்த்திவிட்டால் 'வடநாட்டார்கள் செய்துவிட்டார்கள்' என்று அவர்கள் தலையிலே விழுந்துவிடும் என்று கருதிக்கொண்டு சில வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றனர்.

பைத்தியம் அல்ல!

இதை நான், பலதுக்கும், பல மாதங்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறேன்.

[illegible] மாநாட்டில் பத்திரிகைகளை படித்துக் காண்பித்ததிலிருந்து என் மனம் மாறிவிட்டது. நானும் மனிதன்தான்; எனக்கு சகல வசதிகளும் உண்டு. நான் பைத்தியம் பிடித்தவனும் அல்லன்.

காமராசருடைய வீட்டைக் கொளுத்திய ஆரியர்களால்—ரிஷிகளால் — முனிவன் என்று சொல்லப்பட்டவர்களால்—பச்சை நிறக் காங்கிரசுக்காரர்களால் — அவரைக் கொல்வதற்குச் சதி செய்யப்பட்டது. இது வெற்றி பெறவில்லை. பிறகு, 'ஏதோ தவறிப் பிழைத்துவிட்டார்' என்பதை உணர்ந்த தந்தை பெரியார், 'இனி இந்த நாட்டிலே ஆரியத்தை எதிர்க்க நாம் தயாராக இருக்க வேண்டும்' என்ற காரணத்தால், மக்களுக்கு கத்தி தானம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்.

அவர் கத்தி தானம் பிறகு, [illegible] தோழர்கள், உயிரத் [illegible] செய்ய வேண்டும்'

(4-ம் பக்கம் பார்க்க)

இரயில்வே கால அட்டவணை

சென்ட்ரல்

	புறப்பாடு ம. நி.	வருகை ம. நி.
அவுரா எக்ஸ்பிரஸ்	பகல் 12-40	காலை 8-20
அவுரா ஜனதா எக்ஸ்பிரஸ்	காலை 8-40	மாலை 7-10
அவுரா மெயில்	இரவு 9-15	காலை 5-25
† அவுரா (குளிர் சாதன வசதி) எக்ஸ்பிரஸ் (வாரமொருமுறை)	காலை 6-45	இரவு 9-30
நியூ டில்லி (குளிர் சாதன வசதி) ‡ தென் பகுதி எக்ஸ்பிரஸ்	இரவு 8-00	காலை 11-00
கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ்	பகல் 12-05	மாலை 5-00
டில்லி ஜனதா எக்ஸ்பிரஸ்	,, 2-10	,, 8-10
ஐதராபாத் எக்ஸ்பிரஸ்	பகல் 1-30	பகல் 1-50
பீகார் எக்ஸ்பிரஸ்	இரவு 9-40	காலை 6-50
பம்பாய் மெயில்	,, 10-00	காலை 5-15
பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸ்	பகல் 2-20	பகல் 1-40
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 9-15	மாலை 5-55
§ பம்பாய் (குளிர் சாதன வசதி) எக்ஸ்பிரஸ் (வாரமொரு முறை)	பகல் 12-10	பகல் 2-25
பெங்களூர்மெயில்	இரவு 9-05	காலை 5-40
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 12-30	மாலை 8-20
பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்	காலை 7-35	மாலை 7-30
மங்களூர் மெயில்	மாலை 6-25	காலை 7-40
வெஸ்ட்கோஸ்ட் எக்ஸ்பிரஸ்	காலை 9-45	மாலை 6-20
கொச்சி எக்ஸ்பிரஸ்	இரவு 7-35	காலை 8-10
கேரளாஎக்ஸ்பிரஸ்	மாலை 3-35	,, 11-15
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு 8-10	,, 6-25
விஜயவாடா பாசஞ்சர்	மாலை 4-40	பகல்12-50
விஜயவாடா பார்சல் பாசஞ்சர்	காலை 11-45	காலை 4-25
ரெய்ச்சூர்பாசஞ்சர்	காலை 9-25	மாலை 5-15
கோயமுத்தூர் பார்சல் பாசஞ்சர்	இரவு 9-25	காலை 6-10
பெங்களூர் பாசஞ்சர்	காலை 6-10	இரவு 8-40
ஜோலார்பேட்டை பாசஞ்சர்	,, 11-25	பகல் 1-55
ரேணிகுண்டா பாசஞ்சர்	மாலை 4-50	காலை 9-40
அரக்கோணம் பாசஞ்சர்	,, 6-10	
கூடூர் பாசஞ்சர் அரக்கோணம் வழி		இரவு 9-25
கூடூர் பாசஞ்சர்	காலை 6-55	,, 10-00

† சனிக்கிழமைகளில் புறப்பட்டு செவ்வாய்க் கிழமைகளில் வந்துசேரும்.

‡ வியாழன், சனிக்கிழமைகளில் புறப்பட்டு திங்கள், புதன் கிழமைகளில் வந்துசேரும்.

§ புதன் கிழமைகளில் புறப்பட்டு வெள்ளிக்கிழமைகளில் வந்துசேரும்.

எழும்பூர்

மெயின் லைன்

	புறப்பாடு ம. நி.	வருகை ம. நி.
திருச்சி எக்ஸ்பிரஸ்	காலை 7-05	மாலை 5-10
மதுரை ஜனதா எக்ஸ்பிரஸ்	பகல் 2-55	காலை 7-30
இராமேசுவரம் எக்ஸ்பிரஸ்	இரவு 7-25	காலை 8-05
தென்காசி பாசஞ்சர்	காலை 8-35	இரவு 8-40
மாயவரம் பாசஞ்சர்	பகல் 3-45	
திருவனந்தபுரம் பாசஞ்சர்	இரவு 9-35	காலை 5-55
மதுரை பார்சல் பாசஞ்சர்	இரவு10-15	காலை 5-15
விழுப்புரம் பாசஞ்சர்		பகல் 12-20

கார்டு லைன்

	புறப்பாடு	வருகை
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	இரவு 7-00	காலை 8-30
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	காலை 9-50	மாலை 6-10
திருவனந்தபுரம் மெயில்	இரவு 8-15	காலை 6-55
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	,, 9-05	,, 6-20
இராமேசுவரம் பாசஞ்சர்	காலை11-00	மாலை 4-25

பீச்

	புறப்பாடு	வருகை
* காஞ்சிபுரம் பாசஞ்சர்	மாலை 5-30	காலை 9-58
காஞ்சிபுரம் பாசஞ்சர்	மாலை 6-00	காலை 9-37
★ செங்கற்பட்டு பாசஞ்சர்	,, 5-10	,, 10-45

* ஞாயிற்றுக் கிழமைகளில் ஓடாது.

★ ஞாயிறு, மற்றும் மாநில அரசு விடுமுறை நாட்களிலும் ஓடாது.

சென்னை 78-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

சென்னை 78-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றத்தின் இரண்டாம் ஆண்டிற்கான (1967–68) நிர்வாகிகள் தேர்தல், வட்டக் கிளைக்கழகத் துணைச் செயலாளர் மு. கிருட்டினன் தலைமையில் 17—5—67-ல் நடைபெற்றபோது, கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: என். செல்வராசன்; செயலாளர்: ஆர். எஸ். ஆனந்தன்; துணைச் செயலாளர்: வி. தேசிங்கு; பொருளாளர்: சி. செனிவிலாஸ்; மற்றும் 17 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பணிமனைத் திறப்பு

21—5—67 மாலை 6-மணிக்கு முத்தையா முதலி தோட்டத்தில் திரு ஆர். எஸ். ஆனந்தன் தலைமையில் திரு. கோ. லோகநாதன் கழகக் கொடியேற்றிவைக்க—திரு இளம்பரிதி மன்றப் பணிமனையைத் திறந்துவைக்க—திருவாளர்கள்:—க. பார்த்தசாரதி எம்.சி., கே. சுப்பிரமணி எம்.சி., 'தீக்கதிர்' ஆசிரியர் சே. முத்தையா (இ.பி.), கே. எஸ். பாண்டியன், மு கிருட்டினன், எம். சீனிவாசன், ஜெயபால், ஆர். வி. அழகேசன், ஈ மணி, இ. ஆர். நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

நீண்ட தூரம் செல்லும் அரசினர் துரித பஸ்கள்

சென்னை பாரி முனையிலிருந்து நீண்ட தூரம் செல்லும், அரசினர் துரித பஸ் போக்குவரத்துகளின் காலஅட்டவணை வருமாறு:—

		புறப்பாடு ம. நி.	வருகை ம. நி.
பெங்களூர்			
வேலூர்,கிருஷ்ணகிரி வழி		காலை 7-00	மாலை 6-00
நெய்வேலி			
திண்டிவனம், விழுப்புரம்வழி	(1)	,, 8-15	பகல் 11-30
பண்ருட்டி வழி	(2)	பகல் 2-30	இரவு 9-15
திருச்சி			
செங்கற்பட்டு, விழுப்புரம்வழி	(1)	காலை 5-30	பகல் 2-35
	(2)	,, 10-00	இரவு 7-05
	(3)	பகல் 1-00	,, 10.35
சேலம்			
செஞ்சி, திருவண்ணாமலை வழி	(1)	காலை 7-15	பகல் 2-10
விழுப்புரம்,மாதப்பேட்டை, திருக்கோவிலூர்வழி	(2)	,, 10-30	மாலை 4-00
நாகப்பட்டினம்			
கடலூர், மாயவரம் வழி	(1)	,, 8-30	மாலை 3-00
	(2)	பகல்12-30	,, 6-00
	(3)	,, 12-00	இரவு 9-00
தஞ்சை			
பாண்டிச்சேரி, நெய்வேலி	(1)	காலை 6-30	பகல் 4-15
கும்பகோணம் வழி	(2)	,, 8-00	மாலை 5-45
	(3)	,, 9-30	இரவு 8-15
	(4)	பகல்12-00	,, 9-45
கோவை			
வேலூர், சேலம் வழி	(1)	காலை5-30	இரவு 6-10
விழுப்புரம், சேலம் வழி	(2)	,, 6-00	இரவு 8-30
போளூர், ஊத்தங்கரை, சேலம் வழி	(3)	,, 8-45	,, 10-00
மதுரை			
விழுப்புரம், திருச்சி வழி	(1)	காலை7-00	மாலை 6-30
	(2)	,, 9-00	,, 8-30
இராமநாதபுரம்			
விழுப்புரம்,திருவாரூர், பட்டுக்கோட்டை வழி		காலை 6-15	இரவு10-00
கிருஷ்ணகிரி			
திருவத்திபுரம், போளூர் வழி	(1)	காலை 8-15	மாலை 5-30
சங்குவார்சத்திரம் வழி	(2)	,, 6-00	பகல்12-00
	(3)	மாலை3-00	இரவு 9-30
திருப்பதி			
தடா, காளஹஸ்தி வழி	(1)	காலை6-00	மாலை 9-45
திருத்தணி, புத்தூர் வழி	(2)	,, 7-00	,, 10-30
தடா, காளஹஸ்தி வழி	(3)	,, 8-00	பகல்12-45
திருத்தணி, புத்தூர் வழி	(4)	,, 9-00	,, 1-30
ஊத்துக்கோட்டை, சத்தியவேடுவழி	(5)	,, 11-30	மாலை 4-45
ஊத்துக்கோட்டை, புத்தூர் வழி	(6)	பகல்1-00	,, 5-45
ஊத்துக்கோட்டை, சத்தியவேடுவழி	(7)	,, 3-00	,, 6-45
ஊத்துக்கோட்டை, புத்தூர் வழி	(8)	மாலை3-00	இரவு 7-30

முன்னுள் மன்னர்கட்கு இலவச மின்சாரம்—தண்ணீர் கிடையாது!

இராஜஸ்தான் அரசு முடிவு

ஜெய்ப்பூர், மே 30—

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஜெய்ப்பூர், ஜோத்பூர், பிகானிர் மன்னர்களுக்கு இலவசமாக அளித்துக்கொண்டிருந்த மின்சாரத்தையும், தண்ணீரையும் நிறுத்திவிட இராஜஸ்தான் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

"மின்சாரம், தண்ணீர் முதலியவற்றை இலவசமாக அளிப்பதை நிறுத்தினால் மாநில அரசுக்கு ரூ. 3 இலட்சம் மிச்சப்படும்"

இராசபாளையம் தொகுதி தி. ப. தொ. மு. சங்கம்

இராசபாளையம் தொகுதி திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் அமைக்கப்பட்டது; வெ. சுந்தரராசன் பி.எஸ்.சி.பி.எல். தலைவர்—சட்ட ஆலோசகராகவும், இரா. த. இராமச்சந்திரன் துணைத் தலைவராகவும், இரா. மா. பொன்னுசாமி செயலாளராகவும், கே. கருப்பசாமி துணைச்செயலாளராகவும், சா. மணி பொருளாளராகவும், மற்றும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோடம்பாக்கம் நல்வாழ்வுச் சங்கம்

சென்னை-கோடம்பாக்கம் டாக்டர் சுப்பராயன் நகர் நல்வாழ்வுச் சங்கத்தின் பேரவைக் கூட்டம் 14—5—67-ல் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள்:—

தலைவர்: மாணிக்கம்; துணைத் தலைவர்: கே. தனஞ்செயன்; செயலாளர்: என். சிங்காரவேலு; பொருளாளர்: வி. எஸ். விசுவநாதன்; கணக்குத் தணிக்கையாளர்: பொ. தம்பிசாமி.

அரிசி பிரச்சினையைக் கிளப்பி அரசைக் கவிழ்க்க இயலாது

மக்களைப் பட்டினி போட்டவர்கள் மக்களுக்காகப் பரிந்து பேசுவதா?

பக்தவத்சலம்--அழகேசன் கும்பலுக்கு கே. ஏ. மதியழகன் சாட்டை

நாட்டரசன் கோட்டை, மே 31—

"20 ஆண்டுகளாக மக்களைப் பட்டினி போட்டு வதைத்த பக்தவத்சலம், இந்த அரசைக் கவிழ்க்கச் சதி செய்கிறார். இது மக்கள் அரசு, இந்த அரசை பக்தவத்சலமோ அல்லது ஓ. வி. அழகேசனோ, அசைக்க முடியாது"

என்று, தமிழக உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் கூறினார்.

நாட்டரசன் கோட்டை ஊராட்சி மன்றமும் கிராம மக்களும் அளித்த வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"20 ஆண்டுகளாக ஆட்சி செய்த காங்கிரசுக்காரர்கள், தேர்தல் முடிந்து சரியாக மூன்று மாதங்கள் ஆன பிறகு, 'மூன்று படி அரிசி எங்கே?' என்று கேட்கிறார்கள். கேட்பது யார்?—பக்தவத்சலம், ஓ. வி. அழகேசனுந்தான்.

மக்கள் கேட்டால் பொருத்தமாக இருக்கும்; ஏனென்றால், எங்களுக்குப் புனிதமான வாக்களித்து ஆட்சிப் பொறுப்பில் அமரச் செய்தவர்கள் மக்கள் தான்."

அமைச்சர் மேலும் பேசுகையில், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய பகுதியாகக் கருதி அப்பகுதியை வளமுள்ள பகுதியாக ஆக்க நான் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வேன் என்று கூறினார்.

பின் சட்டமன்ற உறுப்பினர் சி. சேதுராமனுக்கு பயணப் படிக்காக ரூ. 201-ம், சொக்கநாதபுரம் ஊராட்சி சார்பில் ரூ. 101-ம், வடகிழ வேங்கைப்பட்டி மக்கள் சார்பில் ரூ. 51-ம், வருந்தம்பட்டி தி. மு. க. சார்பில் ரூ. 51-ம் அளிக்கப்பட்டது.

நாமனூர் ஊராட்சி மன்றச் சார்பில் உணவு அமைச்சர் திரு மதியழகனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு திரு. ராமசாமி அம்பலம் தலைமைதாங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தா. கிருஷ்ணன், மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் சி. சேதுராமன் ஆகியோர் பேசினர்.

சொக்கநாதபுரத்தில்:

திரு. மதியழகன் நாமனூரிலிருந்து நேராக சொக்கநாதபுரம் சென்று அங்கு ஊராட்சிமன்றம் அளித்த வரவேற்பில் கலந்து கொண்டார்.

ஊராட்சிமன்றத் தலைவர் திரு சி. சேதுராமன் அமைச்சரை வரவேற்று வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

அலவாக்கோட்டையில்:

திரு. கே. ஏ. மதியழகன் அலவாக்கோட்டை ஊராட்சிமன்றம் அளித்த வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

விழாவுக்கு ஊராட்சிமன்றத் தலைவர் செ. சோலைகுட்டி அம்பலம் தலைமை தாங்கினார்.

ஊராட்சிமன்றச் சார்பில் உணவு அமைச்சரிடம் சில கோரிக்கைகளைக் கொண்ட மனு அளிக்கப்பட்டது.

திரு. இராம. சுந்தரம் உணவு அமைச்சரை வரவேற்று வரவேற்பு இதழ் படித்தளித்தார்.

கிராம மக்களின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சேதுராமன் அமைச்சரின் பயணப் படிக்காக ரூ 201-ம், தி. மு. க. சார்பில் ரூ 101-ம், முத்தூர்பட்டி மக்கள் சார்பில் ரூ 51-ம் வழங்கப்பட்டது.

உணவு அமைச்சர் தம்முடைய உரையில் கூறியதாவது:—

"தி. மு. க. அரசு ஏழை மக்களின் அரசு. தி. மு. க. அமைச்சர்கள் மக்களின் ஊழியர்களே. அமைச்சர்களின் சமாசார்கள் பொது மக்கள். மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்து அதற்கான வழி காணவே உங்களிடம் வந்திருக்கிறேன்."

கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் சி. சேதுராமன், மக்கள் சபை உறுப்பினர் தா. கிருட்டினன், மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, சாகனேரி உ. பி. லப்பன், திரு ஞானசம்பந்தம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

செயலாளர் கா. சைமது முகமது நன்றி கூறினார்.

'அலுவல்களை விரைந்து முடிக்க ஒத்துழைப்புத் தாருங்கள்'

'உங்கள் கோரிக்கைகளைக் கவனித்து ஆவன செய்கிறோம்'

அரசு ஊழியர்களிடை அமைச்சர் மு. கருணாநிதி தெளிவுரை

கோவை, மே 31—

"நத்தை வேகத்தில் செல்லும் அரசாங்க ஆணைக் கட்டுகளை விரைந்து முடித்து அனுப்ப ஒத்துழைப்புத் தாருங்கள்"

என்று தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி, அரசு ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

கோவை பொதுப் பணித்துறை மாமசிழ் மன்றச் சார்பில் அமைச்சர் திரு. கருணாநிதிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"ஒரு புத்திசாலியான மனைவி தனக்கு மூக்குத்தி, தோடு, சங்கிலி வேண்டுமானால் தன் கணவனிடம் அதை நேரடியாகக் கேட்கமாட்டாள்; அதைக் கேட்கும் முறையில், கணவனிடம், 'நான் என்ன உங்களிடம் சங்கிலியா கேட்டேன்? மூக்குத்தியா கேட்டேன்? இல்லை—தோடுதான் கேட்டேனா? கேட்டால் நீங்கள் வாங்கித் தராமலா இருப்பீர்கள்?' என்று மனைவி சொல்லிப் புரியவைப்பாள். அதைப்போல நீங்களும் உங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துவிட்டீர்கள்."

'தமிழக அரசு ஊழியர்கள் சாதுக்கள்' என்று கூறியிருக்கிறீர்கள்; சாதுக்கள் என்றதும், 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகிறது. ஆனால் ஊழியர்களை மிரளவிடாது உங்களது கோரிக்கைகளை நிறைவேற்றப் பாடுபடுவோம்"

தஞ்சையில் நெடுஞ்சாலை—பாசனத் தொடர்பாக மாவட்ட மாநாட்டை நடத்தினேன். அதில் வந்த 850 கோரிக்கைகளில் 155 கோரிக்கைகளுக்கான வேலை உடனடியாகத் தொடங்கப்பட்டுவிட்டது.

இதுமாதிரியான மாநாடு அடுத்த மாதம் 3, 4-ந்தேதிகளில் தென்னாற்காட்டில் நடக்கப்போகிறது. அதன் பின் கோவையிலும் பிற மாவட்டங்களிலும் நடக்கும்.

தமிழகத்தில் மொத்தம் 25,000 ஏரிகள் உள்ளன; இவற்றில் இதுவரை 5,000 ஏரிகளில்தான் மராமத்து வேலைகள் நடந்துள்ளன. உணவு உற்பத்தியைப் பெருக்க இதனைப் பழுதுபார்த்துப் பயன்படுத்த வேண்டும்.

இத்திட்டத்துக்கு மொத்தம் ரூ. 700 கோடி செலவாகும். முதல் ஆண்டில் ரூ. 25 கோடி தேவைப்படுகிறது.

ரூ. 25 கோடி செலவு செய்தால் 15 இலட்சம் டன் உணவு அதிகமாக உற்பத்தி செய்ய முடியும்; இதற்கு மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்தோம்; ஆனால் அவர்கள் கைவிரித்துவிட்டார்கள். ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்றத் தீர உறுதி பூண்டுள்ளோம்; எனவே, அரசு ஊழியர்கள் தாமதமின்றி, தீவிரமாக உழைத்து உதவ வேண்டும்."

கோடம்பாக்கத்தில் விளையாட்டுத் திடல் திறப்பு

அறிஞர் அண்ணா கலந்து கொள்கிறார்

சென்னை 92-வது வட்டம் கோடம்பாக்கம் காமராசர் காலனியில் மாநகராட்சி மன்றம் ஏற்படுத்தியுள்ள விளையாட்டுத் திடலை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்கள். இந்த விழா, 1—6—67 மாலை 5 மணிக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமையிலும் தோழர் க. துரை முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பாளர்கள்: சா. கணேசன் (மத்தியக் குழுத் தலைவர்) எம். கோபால் (வட்டக் குழுத் தலைவர்).

மதுரை எழுத்தாளர் மன்ற எட்டாவது ஆண்டுவிழா

மு. கருணாநிதி, ஆதித்தனார் கலந்துகொள்கின்றனர்.

மதுரை எழுத்தாளர் மன்றத்தின் எட்டாவது ஆண்டு விழா, ஜூன் திங்கள் 11-ஆம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி சிறப்புரையாற்றுவார்.

தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

மேலவை உறுப்பினர் திரு. அ. சிதம்பரநாதன் எம்.எல்.சி., மன்றத் தமிழ்ப் பாவை மலரை வெளியிட்டுத் திறப்புரையாற்றுவார்.

விழாவில் மன்றத் தலைவர் திரு. ஔவை சு. துரைசாமி தலைமை தாங்குவார்.

வணக்கு என்ற பொதுத் தலைப்பில் கவிஞர்கள் அப்துல் ரகுமான், மீ. இராசேந்திரன், காரைக்குடி நாவுக்கரசன், சக்திப்பெருமாள் ஆகியோர் முறையே வகுத்தல் — கூட்டல் — கழித்தல் — பெருக்கல் என்னும் பொருட்களில் தனித்தனியே கவி பாடுவர்.

கவியரங்குக்குக் கவிஞர் சுரதா தலைமை தாங்குவார்.

ஆண்டு விழாவில், இவ்வாண்டில் மன்றம் நடத்திய கதை —கவிதை—கட்டுரை—நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

ஆண்டுவிழா நிகழ்ச்சிகளையும், [illegible] ஒலிப்பதிவுச் செய்யத் திருச்சி வானொலி நிலையத்தாரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு ஒளியுருவ எண்ணைப் படமாக எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போலீசு விசாரணையால் வேலை பெற முடியாதவர்கள் புதிய ஆட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்

திருவனந்தபுரம், மே 31—

தங்களின் முன் நடவடிக்கைகளைப் பற்றி போலீசார் விசாரணை செய்ததன் விளைவாக பணியாற்றத் தகுதிபெற்ற 62 பேர், முந்திய ஆட்சிக் காலத்தில் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை; அவர்களுக்கு கேரளத்தின் கூட்டணி ஆட்சியில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை

"தனியார் பள்ளி ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடலாம் என்று அரசு முடிவு செய்துள்ளதைப் போலவே, அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் அரசியலில் ஈடுபட உரிமை வழங்க வேண்டும்"

என்று கோரி எர்ணாகுளத்தில் உள்ள அரசாங்க ஆசிரியர் கழகம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கேரளத்தில் உள்ள ஆசிரியர்களின் ஓய்வு வயது 58 லிருந்து 55-ஆகக் குறைக்கப்பட்டிருப்பதைக் கடிந்துரைக்கும் தீர்மானம் ஒன்றையும் ஆசிரியர் சமூகம் நிறைவேற்றியுள்ளது.

அரசு அலுவலர் மனு

வேலை நீக்கம் செய்யப்பட்ட 47 அரசு ஊழியர்கள் கேரள உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்தனர்.

உயர் நீதிமன்ற நீதிபதி வி. பி. கோபாலன் நம்பியார் அந்த மனுவை ஏற்றுக்கொண்டார். பாலக்காடு மாவட்டத்தில் அரசின் தணிக்கைச் சாவடிகளில் பணிபுரிந்து வந்த 47 பேரை மாவட்ட (கலெக்டர்) வேலை நீக்கம் செய்தார்; அந்த வேலை நீக்க ஆணையைத் தள்ளுபடி செய்யக் கோரி அந்த ஊழியர்கள் 'ரிட்' மனு தாக்கல் செய்துள்ளனர்.

மதுக்கடைகள் ஏலம்!

கோழிக்கோடு, மே 31—

கோழிக்கோடு வட்டத்தில் உள்ள 63 மதுக் கடைகள் ரூ 5,65,100-க்கு ஏலம் விடப்பட்டன.

கடந்த செவ்வாயன்று 64 மதுக் கடைகள் ஏலம் விடப்பட்டன. இதுவரை 127 கடைகள் ரூ. 29,74,900-க்கு ஏலம் போயின!

அறிக்கை

தேர்தல் சூழ்நிலையை ஒட்டி கழகச் செய்திகளை விரிவாக வெளியிடவேண்டிய இன்றியமையாத நிலைமை ஏற்பட்ட காரணத்தால், 'நம் நாடு' நாளிதழின் அளவு பெரிதாக்கப்பட்டது. சழகத் தோழர்களின உற்சாகமும் பொது மக்களின் ஆதரவும், பெரிய அளவு 'நம் நாடு' இதழை வளர்க்கத் துணைபுரிந்தன.

தொடர்ந்து 'நம் நாடு' இதேவிதப் பெரிய அளவில் வரவேண்டுமென பல தோழர்கள் வலியுறுத்தியவண்ணமுள்ளனர். அவர்களின் ஆர்வமும் பற்றும் நமக்கு உற்சாகத்தைத் தருகின்றன.

இருப்பினும், 'நம் நாடு' இதழை இதுவரை அச்சடித்து வந்த இயந்திரம், இடைவிடாத உழைப்பால், சீர்கேடடைந்துள்ளது. சிறிது ஓய்வளித்து — புதுப்பித்தாலன்றி அச்சடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பெரிய அளவில் 'நம் நாடு' இதழைத் தொடர்ந்து கொண்டு வருவதற்குப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்யவேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகளும், ஆலோசனைகளும், நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

'நம் நாடு' இதழைப் பெரிய அளவில் கொண்டுவர வேண்டுமென்ற விருப்பம் சழகத் தோழர்களைப் போலவே நமக்கும் உள்ளதென்றாலும், இருக்கும் சூழ்நிலையிலும், இயந்திரச் சீர்கேட்டிலும், 'நம் நாடு' இதழைப் பழைய படி சிறிய அளவில் கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். 1967 ஜூன் 1-ம் நாள் முதல் 'நம் நாடு' பழைய அளவில் 7 காசு விலையில் வெளிவரும்.

சிறிய அளவு ஒரு தற்காலிக ஏற்பாடே! பெரிய அளவில், தக்க முறையில் 'நம் நாடு' இதழைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முடிவடையும் வரை சிறிய அளவு இதழ் வெளிவரும்.

அன்பன்,

இரா. செழியன்

எம். ஆர். இராதா வழக்கு—தலைமைப் போலீசுக்காரர் சாட்சியம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று மாநாட்டிலே நான் உரையாற்றினேன்.

மாநாடு முடிந்து நான் போகும்போது, 'உயிர்த் தானம் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டாரே இராதா அவர்கள் — இவர் முதலில் செய்தால், பிறகு நாம் செய்வோம்' என்று கிண்டலாகவும், சிரித்துக் கொண்டு வேடிக்கையாகவும் சிலர் பேசிக்கொண்டு போனார்கள்.

எதிர்க் கட்சிக்காரர்களுக்கும், நம் தோழர்களுக்கும் நான் சொல்லுகிறேன்—'ஒவ்வொரு மதத்தை அழிக்க ஒவ்வொரு மதமும் சங்கம் கட்டிக்கொண்டு இருக்கும் இந்த நாட்டிலே ஆரியத்தை அழிப்பதைவிட ஆரியத்துக்குத் துணையாக—அவர்களுக்கு அடிமையாக— அதைத் தலைவனாகக் கொண்ட நம்மவரில் சிலரை மட்டும் அழித்துவிட வேண்டும்' என்பது என் கருத்து.

உயிர்த் தானம் செய்வதற்கு ஒரு இலக்கம் இந்தத் தேர்தலுக்குள் நமது நாட்டின் தேவை, அதற்கு நான் தலைமை தாங்கத் தயார். உயிர்த் தானம் என்பது சாம்பிராணி சாவது அல்ல; வெங்காயத்தை ஊற்றிக் கொண்டு கொளுத்திக்கொள்வதும் அல்ல; அது சண்டித்தனம்.

நாம் உயிர்த் தானம் செய்ய வேண்டும், நல்ல ஆட்சியை —நல்லவர்களைக் கவிழ்ப்பதற்கு உள்ள சதிகாரர்களுடைய உயிரை ஒன்றோ இரண்டோ எடுத்துச் செல்ல வேண்டும். இதுதான் உயிர்த் தானம் செய்யும் இயக்கத்தின் கொள்கை. நான் செல்கிறேன். நீங்களும் இதுபோல் செய்யவேண்டும் — செய்வீர்களா?'

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டு இருந்தது.

பின்னர், எட் கான்ஸ்டபிள் இலட்சுமணனிடம் அரசாங்க வழக்கறிஞர் கேட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் வருமாறு:—

கே:—உங்கள் நெம்பர் என்ன?

ப:—3426

கே:—எப்போது ஏட் ஆனீர்கள்?

ப:—18—6—66-லிருந்து.

கே:—12—1—67-ல் டூட்டியில் இருந்தீர்களா?

ப:—ஆமாம்.

கே:—இந்த வழக்கு விஷயமாக உங்களுக்கு என்ன தெரியும்?

ப:—சம்பவம் நடந்த அன்று மாலை 4-45 மணியிலிருந்து டூட்டியில் இருந்தேன்; அன்று 5-45 மணிக்கு சப்-இன்ஸ்பெக்டர் துரை அவர்கள், போலீசு நிலைய வராண்டாவிலிருந்து என்னுடைய பெயரைச் சொல்லி 'இங்கே வா' என்று கூப்பிட்டார்! நான் பின்பக்கமிருந்து முன்னால் வரும்போது ஒரு காரும் அங்கே இருந்தது; சப்-இன்ஸ்பெக்டர் துரை, எம். ஆர். இராதா, இரத்தத்துடன் காரில் இருக்கிறார்; அவரை இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு அழைத்துப் போ' என்றார்.

கே:—போகும் போது காரில் யார் யார் இருந்தார்கள்?

ப:—முன் சீட்டில் டிரைவர் அருகில் நான் இருந்தேன். பின் சீட்டில் வாட்ச்மேன் முத்துவும், எம். ஆர் இராதாவும் இருந்தார்கள்.

கே:—கார் நெம்பர் என்ன?

ப:—எம். எஸ். இசட் 1843.

கே:—காரை ஓட்டியவர் யார்?

ப:—டிரைவர் பெருமாள்.

கே:—இராதா என்ன அணிந்து இருந்தார்.

ப:—சில்க் சட்டை — வேட்டி — சரிகைத் துணி. (கோர்ட்டில் சாட்சி இவற்றை அடையாளம் காட்டினார்).

கே:—முத்து என்ன உடை அணிந்திருந்தார்?

ப:—டிரவுசர் சட்டை போட்டிருந்தார்.

கே:—இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு எப்போது போய்ச் சேர்ந்தீர்கள்?

ப:—மாலை சுமார் 6–10 மணியிருக்கும்.

கே:—அப்போது என்ன நடந்தது?

ப:—காரிலிருந்து இறங்கி நேரே கேஷுவாலிட்டிக்குப் போனேன்; எம். ஆர். இராதா காயத்துடன் வந்திருக்கிறார் என்று சொன்னேன்: உடனே ஸ்ட்ரெச்சரை எடுத்துக்கொண்டு கார் அருகில் வந்தார்கள். நான் இராதா இருந்த பக்கத்து உள்கதவை திறந்து வலது கையைத் தாங்கலாகப் பிடித்தேன். முத்து கீழே இறங்கி இடது கையைப் பிடித்து இறக்க நாங்கள் ஸ்ட்ரெச்சரில் அவரை வைத்துக் கொண்டு போனோம்.

அப்போது எம். ஆர். இராதா, தன் பாக்கெட்டில் இருந்து ஒரு பேப்பரை எடுத்து, 'இந்த பேப்பரை வைச்சுக்கோ' என்று என்னிடம் கொடுத்தார். உடனே இராதாவை உள்ளே கொண்டுபோய் விட்டார்கள். அந்த பேப்பரை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன்; முதல் பக்கத்தின் மேலே 'என்னுடைய முடிவு' என்று எழுதியிருந்தது. அந்தப் பேப்பர் ஓரத்திலும் இரத்தக் கறை இருந்தது. இரண்டு பேப்பரில் 4 பக்கங்களிலும் எழுதப்பட்டு இருந்தது. முதல் 3 பக்கங்கள் கார்பன் பேப்பர் வைத்து எழுதப்பட்டும், கடைசிப் பக்கம் பேனா மையினால் எழுதப்பட்டும் இருந்தது. ஒவ்வொரு பக்கத்திலும் இங்கிலீஷில் எம். ஆர். இராதா என்று கையெழுத்தும் போட்டிருந்தது. அதைப் படித்துப் பார்த்தேன்;—வருமான வரி சமாச்சாரம் — மீட்டிங் சமாச்சாரம்—ரத்த தானம்— உயிர்த் தானம்—இதுமாதிரி சில அரசியல் சம்பந்தப்பட்டவை எழுதப்பட்டு இருந்தன.

கே:—அதை என்ன செய்தீர்கள்?

ப:—அதை மடித்து வைத்துக் கொண்டேன். அந்தக் கடிதத்தில் என்னுடைய கையெழுத்தையும், தேதியையும் போட்டேன்.

[அந்தக் கடிதத்தை சாட்சி கோர்ட்டில் அடையாளம் காட்டினார். தன் கையெழுத்தும் இருப்பதை அடையாளம் காட்டினார். அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சி கோர்ட்டில் படித்துக் காட்டினார்.]

கே:—பிறகு என்ன நடந்தது?

ப:—செங்கற்பட்டு பெரிய போலீசு அதிகாரி வந்து, 'எம். ஆர். இராதாவை கொண்டுவந்த போலீசார் யார்' என்று விசாரித்தார்; நான்தான் கொண்டு வந்ததாக அவரிடம் சொன்னேன். அப்போது அவர், 'இராதா ஏதாவது பேப்பர் கொடுத்தாரா?' என்று கேட்டார்; உடனே அந்தக் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். பிறகு என்னுடைய போலீசு நிலையத்துக்கு வந்து என்னுடைய சப்-இன்ஸ்பெக்டரிடம் நடந்த விஷயத்தைச் சொன்னேன்.

கே:—இதைப்பற்றி எதிலாவது எழுதினீர்களா?

ப:—என்னுடைய டைரியில் எழுதினேன்.

கே:—சி. ஐ. டி. போலீசு அதிகாரி விசாரித்தாரா?

ப:—13-ந் தேதி மாலை வந்து விசாரித்தார்.

இத்துடன் அரசாங்க வழக்கறிஞரின் விசாரணை முடிவடைந்தது.

அடுத்து இராதா வழக்கறிஞர், இலட்சுமணனை விசாரித்த விவரம் வருமாறு:—

கே:—உங்களுடைய சப்-இன்ஸ்பெக்டர் யார்?

ப:—தங்கவேல்; சட்டம்—ஒழுங்கு சப்-இன்ஸ்பெக்டர் அவர்.

கே:—இரத்தக்கறை இருந்ததாகச் சொன்னீர்களே—அவர் அபாயமாக இருக்கிறார் என்று நினைத்தீர்களா?

ப:—ஆமாம்.

கே:—போலீசு நிலையத்திலிருந்து புறப்பட்டது முதல் இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போக எவ்வளவு நேரம் ஆயிற்று?

ப:—20 அல்லது 25 நிமிடம் இருக்கலாம்.

கே:—போகிற வழியில் இராதாவிடம் ஏதாவது கேட்டீர்களா?

ப:—இல்லை.

கே:—கேட்காததற்குக் காரணம் என்ன?

ப:—உடனே இராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும் என்று போலீசு சப்-இன்ஸ்பெக்டர் சொல்லி இருந்தார்.

கே:—எதுவுமே பேசவில்லையா?

ப:—அவர் பேசும் நிலையில் இல்லை; அதனால் பேசவில்லை.

கே:—பேசினால் ஆபத்து என்று நினைத்தீர்களா?

ப:—ஆமாம்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடிவுற்றது.

கூடுவாஞ்சேரி சமூகநலச் சங்க ஆண்டு விழா

அமைச்சர் செ. மாதவன் கலந்துகொள்கிறார்

கூடுவாஞ்சேரி சமூக நலச் சங்க ஆண்டு விழா, 1—6—67 பிற்பகல் 5-30 மணிக்கு வெங்கடேசுவரா அரங்கில் நடைபெறும்; தமிழகச் சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு முனு ஆதி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

மதுவிலக்கு தீவிரமாகச் செயல்படுத்தப்படும்

கைவிடுவதால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவர்

செய்தியாளர்களிடம் அண்ணா விளக்கம்

திருச்சி, மே 20—

மதுவிலக்குப் பற்றி, பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தலாம் என்று அண்மையில் தாம் வெளியிட்ட கருத்து, கருத்தறிவிப்பே தவிர கொள்கை அறிவிப்பு அல்ல என்று முதலமைச்சர், அண்ணா அவர்கள் இங்கு விளக்கமளித்தார்கள்.

மதுவிலக்கை மேலும் தீவிரமாகச் செயல்படுத்த தாம் கொண்டுள்ள முடிவையும் அவர் உறுதிப்படுத்தினார்.

இத்தொடர்பில் அண்ணா அவர்கள் விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"உதகையில் நடந்த அரிமா சங்கக் கூட்டத்தில் நான் பேசுகையில், அரிமா சங்கம் போன்ற அரசாங்கத் தொடர்பற்ற அமைப்புகளின் சில பொறுப்புகளை எடுத்துரைத்தேன்; அப்போது உதாரணத்துக்காக, மதுவிலக்குப் போன்ற பிரச்சினைகளில், பொதுமக்கள் கருத்தை அறிந்துகொள்ள இந்த அமைப்பு முயலலாம் என்று குறிப்பிட்டேன்.

மதுவிலக்கைக் கைவிட்ட மாநில அரசுகளைப் பற்றி பத்திரிகைகள் தாராளமாகக் கண்டித்து, 'அரசியல் சட்டத்துக்கு எதிராக எப்படி அந்த மாநில அரசுகள் இயங்கலாம்' என்று கேட்டு எழுதியதைத் தாம் வரவேற்பதாகக் கூறினார்.

"மதுவிலக்கைக் கைவிடுவது ஏழை மக்களைப் பாதிக்கும்" என்றார் அண்ணா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுவோராகவும், அச்சிடுவோராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, குளியங்காரமணி செட்டித் தெரு, சென்னை 18) அச்சிடப்பட்டது.

பத்திரிகைத் தொழிற் பயிற்சி நிலையம்

அவைத்தலைவர் ஆதித்தனார் வக்குகிறார்

திருச்சி மே 5—

பத்திரிகைத் தொழிலில் பயிற்சியளிக்கும் ஒரு கன்னிமையோ, கல்லூரியையோ தாம் துவக்கப்போவதாக, தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் இங்கு தெரிவித்தார்.

"இந்தப் பள்ளி அல்லது கல்லூரி, சென்னையிலோ திருச்சியிலோ அமையும்" [illegible]

நாட்குறிப்பு (நடக்க இருப்பவை)

1—6—67

வி. மாத்தூர்

தி. மு. க. கிளையின் சார்பில் மாலை 6-மணிக்கு நூல் நிலையம் [illegible] மன் கோயில் திடலில்; தலைவர்: மா. செம்தேவன், பாராட்டுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., ஏ. கிருட்டினமூர்த்தி, வ. சாமிக்கண்ணு; பாராட்டு பெறுவோர்: எம். சண்முகம் எம்.எல்.ஏ., எம். இராமன் எம்.எல்.ஏ.

வீரக்குடி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் வெற்றி விழாக் கூட்டம்; மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: கு. சுந்தசாமி; பேசுவோர்: எஸ். எஸ். தென்னரசு, கா. காளிமுத்து, இரா. சின்னச்சாமி, ஏ. ஆர். பெருமாள், ஆ. திராவிடமணி, மற்றும் பலர். (இரவு 8-மணிக்கு கலை நிகழ்ச்சி உண்டு.

திருவரங்கம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு சாத்தாரா தெருவில்; தலைவர்: தா. துரைசாமி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., சு. நெடுமாறன், எஸ். எம். வி. சாமி, க. இராசவேலு, மா. இராமையா, அ. நடராசன், மு. நடராசன், மற்றும் பலர்.

செங்கற்பட்டு

5-வது வட்டம் சே. வி. சே. சாமி படிப்பகத்தின் சார்பில்; இரவு 7-மணிக்கு தர்கா திடலில்; தலைவர்: ஏ. ஆர். அன்சர் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், சி. சிட்டிபாபு எம்.பி., முனு. ஆதி எம்.எல்.ஏ., கோ. கோதண்டம் எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம். எல்.ஏ., செ. ஏ. பெரோமன். ஆ. விநாயகம் எம்.சி., மா. வீரசாமி எம்.சி., வ. கோபதி எம்.சி., எம். அபுபக்கர்.

சென்னை 14-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு நாராயணசாமி தோட்டத் தெருவில்; தலைவர்: மு. கண்ணதாசன்; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, சட்டமன்ற உறுப்பினர்கள் ம. பொ. சிவஞானம், எல். கணேசன், அப்துல்லா பேக், மற்றும் அ. செல்வராசன் எம்.சி., எம். ஆர். ஆர் வாசு, ஆர். கிளார்மியான் எம்.சி. அ. அ. ஜின்னா, சி. தர்மலிங்கம், பி. மாணிக்கம்.

2—6—67

குளித்தலை

கலைவாணர் என். எஸ். கே. கலை மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு வ.உ.சி. திடலில்; தலைவர்: வே. இராமானுசம்; பேசுவோர்: சி. தமிழரசி, எம். கந்தசாமி எம்.எல்.ஏ., கெ. சவுந்தரபாண்டியன் எம். எல். ஏ., மீ. சு. இளமுருகு பொற்செல்வி, தி. வீ. முத்துக்கிருட்டினன், கு. சை. சிவராஜ், ஆ. கெ. கிருட்டினன், வி. சக்கரபாணி, கே. சி. செல்லையா, மற்றும் பலர்.

உலிபுரம்

மாணவர் குழாம் சார்பில் பாராட்டுவிழா; இரவு 8 மணிக்கு மாணவர் இராசேந்திரன் திடலில்; தலைவர்: மு. [illegible]; பாராட்டு பெறுபவர்: கெ. சீனிவாசன் எம்.எல்.ஏ.; பாராட்டுவோர்: மு. மாரிமுத்து எம்.எல்.ஏ., தமிழ்மாறன், அரங்கராசன், இரா. தியாகராசன், டி. சி. தங்கவேலு, சு. இராசேகரன்.

தம்மம்பட்டி

தி.மு.க. சார்பில் பாராட்டு விழா; இரவு 7 மணிக்கு வண்டிப்பேட்டை திடலில்; தலைவர்: எஸ். ஏ. அப்துல் சுக்கூர்; பேசுவோர்: கெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., எம். தெய்வீகம் எம்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் து. ப. அழகமுத்து, கே. என். சின்னப்பெருமாள், எம். மாரிமுத்து, கெ. பெரியசாமி மி. சின்னச்சாமி மற்றும் டி. கே. மாதவன். (மாலை 5 மணிக்கு ஊர்வலம் நடைபெறும்)

தாமல்

தி.மு.க. சார்பில் நன்றியறிவிப்பு கூட்டம்; மாலை 6 மணிக்கு; தலைவர்: டி. நாகன்; பேசுவோர்: முதலமைச்சர் அண்ணா, சட்டமன்ற உறுப்பினர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கே. எம். இராசகோபால், என். கிருஷ்ணன், எஸ். ஜே. இராமசாமி. (மாலை 5 மணிக்கு ஊர்வலம் நடைபெறும்)